The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்." (அரு. 10: 11–16.)

புத்தகம் 18. } மார்ச் 1920. { இலக்கம் 3.

4 MAR 1920 MADRAS

## சென்னை அதிமேற்றிராணியார் நிருபம்

### சென்னை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த குருக்களுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் கர்த்தரில் ஆரோக்கியமும் ஆசீரும் உண்டாவதாக.

சேசுக்கிறீஸ்துநாதரில் நமக்குப் பிரியமுள்ள சங்கைக்குரிய சகோதரர்களே, பிரியமான பிள்ளைகளே,

"பிரமாணத்திற் கதித்தவனாயிருந்தவ னொருவன் சேசுநாதரைச் சோதிக்கத் தொடங்கி: போதகரே, பிரமாணத்தில் பிரதான கற்பனை யாதென்று கேட்டான். அதற்கவர் உன் தேவனாகிய கர்த்தாவை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமத்தோடும், உன் முழு மனதோடும் சிநேகிப்பாயாக. பிரதானமும் முதன்மையுமான கற்பனை இதுவே. ஆயினும் உன் புறத்தியானை உன்னைப்போலச் சிநேகிப்பாயாக வென்கிற இரண்டாங் கற்பனை இதற்கொப்பாயிருக்கின்றது. இவ்விரண்டு கற்பனைகளில் பிரமாணம் முழுவதும், தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்றன

வென்று திருவாக்கருளினர்" என மத்தேயு சுவிசேஷத்தில் (XXII. 35, 40) நாம் வாசிக்கிறோம்.

அர்ச். கிறிசோஸ்தோம் செய்திருக்கிற குறிப்பின்படி: தேவனுக்கும் மனிதனுக்குமுள்ள அணைகடந்த பாரதூர வித்தியாசத்தை வரையறுத்துச் சொல்லமுடியாது. ஆயினும், தம்மட்டில் நாம் வைக்கவேண்டிய சிநேகத்தை நமக்குச் சர்வேசுரன் எவ்வளவுக்குத் தந்தருள்கிறாரெனில், நம்முடைய புறத்தியார்மட்டில் நாம் வைக்கும் சிநேகத்தின் அளவுக்கே தந்தருள்கிறார். நம்மிடத்திலுள்ள பிறசிநேகத்தைக்கொண்டு நாம் சர்வேசுரனை சிநேகிக்கிறோமென்று எண்பிக்கிறோம். நம்முடைய புறத்தியாரை சிநேகிக்கவேண்டுமென்று நமக்குக் கற்பிக்கப்பட்டிருப்பது தம்மைச் சிநேகிக்கவேண்டுமென்று சர்வேசுரன் நமக்குக் கற்பித்திருக்கிறதற் கொப்பாயிருக்கின்றதெனக் கிறீஸ்துநாதர் கூறுகிறார். இவ்விரு கற்பனைகளும் வேறுபடுத்தக்கூடாவண்ணம் ஒன்றுக்கொன்று நெருங்கி எவ்வளவுக்கு ஒன்றுபட்டிருக்கின்றதெனில், நம்முடைய புறத்தியாரையுஞ் சிநேகியாமல் நாம் சர்வேசுரனை சிநேகிக்கமுடியாதாமே. "ஒருவன் சர்வேசுரனை சிநேகிக்கிறேனென்று சொல்லித் தன் சகோதரனைப் பகைப்பானானால் பொய்யனாயிருக்கிறான்; ஏனெனில், தான் காண்கிற புறத்தியானைச் சிநேகியாதவன் காணாத சர்வேசுரனை எப்படி சிநேகிக்கக்கூடும்?" (I அரு. IV. 20). "சிநேகம் உத்தமதனத்தின் பந்தனமாயிருக்கின்றது" (கொலோ. III. 14). அர்ச். சின்னப்பர் உரோமருக்கு எழுதிய நிருபத்தில் "தன் புறத்தியானைச் சிநேகிக்கிறவனேவென்றால் வேதப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். ஆகையால் சிநேகமானது வேதப்பிரமாணத்தின் பரிபூரண நிறைவேறுதலாயிருக்கிறது" (XIII. 8, 10) என்று சொல்லுகிறார். சிநேகத்தின் சாதகமும், தேவ இஷ்டப்பிரசாதமும் ஒருமிக்க ஆத்துமத்துக் கருளப்படுகின்றனவாகையால், ஒரு சாவான பாவமானது அவை இரண்டையும் இழக்கச்செய்கின்றது. அவை இரண்டும் ஒன்றுக்கொன்று எவ்வளவு சம்பந்தப்பட்டிருக்கின்றனவெனில், இரண்டு மொன்றேயென சில பேர்போன வேதசாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

"நமக்கருளப்பட்ட இஸ்பிரீத்துசாந்துவினால் தேவ சிநேகம் நம்முடைய இருதயங்களிலே பொழியப்பட்டது" (உரோ. V. 5). "ஆகையால் நீங்கள் மிகவும் பிரியமானவர்களைப்போலச் சர்வேசுரனைக் கண்டுபாவித்து, கிறீஸ்துநாதர் நம்மைச் சிநேகித்துச் சர்வேசுரனுக்குப் பரிமளவாசனையுள்ள நேர்ச்சியாகவும் பலியாகவும் தம்மை ஒப்புக்கொடுத்ததுபோல, நீங்களும் சிநேகத்திலே நடந்துகொண்டுவருவீர்களாக" (எபேசி. V. 1, 2) என்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார். "சர்வேசுரன் நம்மை நித்திய நேசங்கொண்டு நேசித்துவருகிறார்" (ஜெரேமி. XXXI. 3). "சர்வேசுரன் நம்மை முந்தி சிநேகித்து நம்முடைய பாவங்களுக்குப் பரிகார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினார். மிகவும் பிரியமானவர்களே, சர்வேசுரன் இத்தன்மையாய் நம்மை நேசித்திருக்கையில் நாமும் ஒருவரையொருவர் நேசிக்கக்கடவோம். நாம ஒருவரொருவரை நேசிப்போமாகில் சர்வேசுரன் நம்மிடத்தில் வாசம்பண்ணி, அவருடைய சிநேகம நம்மிடத்தில் சம்பூரணமாயிருக்கும்" (I அருளப். IV. 10, 12).

கிறீஸ்துநாதர் பிறசிநேகத்தைத் தம்முடைய கற்பனையெனச் சொல்லுகிறார். ஏனெனில் அதைப் பூரணமாய் அனுசரிப்பதில் அவரே நமக்கு முன்மாதிரிகையாயிருந்திருக்கிறார்: "என் கற்பனை யென்னவென்றால், நான் உங்களைச் சிநேகித்ததுபோல் நீங்கள் ஒருவரையொருவர் சிநேகிக்கிறதுதான்" (அருளப். XV. 12).

"ஒருவர் ஒருவரைச் சிநேகிப்பீர்களானால் நீங்கள் என் சீஷர்களென்று எல்லோருக்கும் அறிகுறியாயிருக்கும்" (அருளப். XIII. 35) என்று கிறீஸ்துநாதர் திருவுளமபற்றியிருக்கிறதினால், பிறசிநேகந்தான் அவரைப் பின்பற்றி நடக்கிறவர்கள் யாரென்று குறித்துக்காட்டும் அடையாளமாயிருக்கின்றது. மேலும்: "விசுவாசிகளுடைய கூட்டமோவெனில் ஒரே இருதயமும் ஒரே ஆத்துமமுமாயிருந்தது" என நாம அப்போஸ்தலர் நடபடியில (IV. 32) வாசிக்கிறோம. கிறீஸ்துநாதர் கற்பிக்கும் பிற

சிநேகக் கற்பனை பொதுவான சகோதரபட்சத்தையே கற்பிக்கின்றது. அர்ச். சின்னப்பர் உரோமருக்கு எழுதிய நிருபத்தில் "நீங்கள் ஒருவரையொருவர் சகோதரபட்சமாய்ச் சிநேகித்துக்கொள்ளுங்கள்" (XII. 10) என்கிறார். உரோமாபுரியிலிருந்து அர்ச். இராயப்பர் அக்காலத்திய கிறீஸ்துவர்களுக்கெழுதிய தம்முடைய முதல் நிருபத்தில் "சகோதரபட்சமுள்ளவர்களாயிருக்க" (II. 7, III. 8) புத்திசொல்லி அவர்களை ஏவுகிறார். கிறீஸ்து வேதத்தின் மகா மனோகரமான நன்மைகளில் மனிதர்களின் சகோதரத்துவம் ஒன்றாகும். சகோதரத்துவம் அல்லது சகோதரபட்சம் என்பது சகோதரர்கள்போலவும் சகோதரிகள்போலவும், நாம் எல்லோரும் நாள்தோறும் "எங்கள் பிதாவே" என்றழைக்கும் சர்வேசுரனுடைய பிள்ளைகளைப்போலவும் நாம் ஒருவர் ஒருவரைச் சிநேகிக்கவேண்டுமென்பதையே குறிப்பிடுகின்றது. ஆம், நாம் சர்வேசுரனுடைய பிள்ளைகளாகமாத்திரமல்ல, ஆனால் அவருடைய "மிகவும் பிரியமான பிள்ளைகளாகவுமிருக்கிறோம்" (எபேசி. V. 1). ஆனபடியால், ஓரே குடும்பத்திலுள்ளவர்களைப்போல் நாம் ஒருவர் ஒருவரைச் சிநேகிக்கவேண்டியது. ஏனெனில் "கிறீஸ்துநாதரிலிருக்கிற விசுவாசத்தினால் நீங்கள் எல்லோரும் சர்வேசுரனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள். எப்படியெனில், கிறீஸ்துநாதரில் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லோருங் கிறீஸ்துநாதரைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்கள். யூதனென்றுங் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றுஞ் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்கள் எல்லோருங் கிறீஸ்துநாதரில் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. III. 26, 28). வாஸ்தவத்தில் கிறீஸ்துவ பிறசிநேகத்துக்கு வரையறை கிடையாது. அது யாரையும் ஒதுக்கிவைக்காது; மானிடஜாதியார் எல்லோரையும், ஒவ்வொருவரையும் தழுவித் தாபரிக்குந் தன்மைவாய்ந்தது. உங்களிடத்திலுள்ள பிறசிநேகம் யாதொருவரை நீக்குமாகில், அல்லது ஜனசமூகத்தில் உங்களுடைய அந்தஸ்துக்குச் சமானமானவர்களையே பாராட்டுமாகில் உங்களிடத்திலுள்ள அப்பிறசிநேகம் புண்யமல்ல; ஆனால் அது உங்கள் சுபாவங் கற்பிக்கும் வழியாகும். ஆனபடியால், கிறீஸ்துநாதர் தம் கற்பனையென்று திருவுளம்பற்றிய அந்த மகா கற்பனையை நீங்கள் அனுசரிக்கிறதில்லை. சகல ஜாதி ஜனங்களுக்குந் தகப்பன் சர்வேசுரன். கத்தோலிக்கரான நாமோ நம்முடைய நேசம்பொருந்திய தாயாகிய ஓரே சத்திய திருச்சபையின் மக்களாயுமிருக்கிறோம். இந்தமகாப்பட்டபெயருக்கு, எந்த இனத்தாராயிருந்தாலுஞ் சரி, ஜனசமூகத்தில் நம்முடைய அந்தஸ்து எத்தன்மைத்தானதாயிருந்தாலுஞ்சரி, நாம் எல்லோரும் பாத்தியதையும் யோக்கியதையுமுடைத்தானவர்களாயிருக்கிறோம். மானிடர் மேலான அந்தஸ்தினரெனக் கிறீஸ்துநாதர் அறிவித்திருக்கிறார். உலகமோ இதை அவருடைய வருகைக்குமுந்தி அறிந்ததில்லை. கிறீக் தேசத்தில் அன்னிய தேசத்தான் ஜாதிப்பிரஷ்டை செய்யப்பட்டவனாயிருந்தான். உரோமாபுரியில் அந்நகரத்து நிவாசியெனும் பட்டப்பெயருள்ளவர்கள் மிக்க மதிக்கப்பட்டுவந்தார்கள். ஆனால் நமக்குள் இத்தகைய வேற்றுமையும் வித்தியாசமுமில்லை. ஏனெனில் கிறீஸ்துநாதரிலிருக்கிற விசுவாசத்தினால் நாம் எல்லோரும் சர்வேசுரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் (கலா. III. 28). "உங்களை நேசிக்கிறவர்களை நேசிக்கிறதில் உங்களுக்கு வரத்தக்க சம்பாவனையென்ன? ஆயக்காரரும் அவ்வண்ணஞ் செய்கிறதில்லையோ? உங்கள் சகோதரருக்கு மாத்திரம் வந்தனஞ் செய்வீர்களேயாகில் நீங்கள் மற்றவர்களிலும் அதிகஞ் செய்கிறதென்ன? அஞ்ஞானிகளும் அப்படிச்செய்கிறதில்லையோ?" (மத். V. 46, 47). மேலும் கிறீஸ்துநாதர் "மிகவும் சிறியரான என் சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே அதைச் செய்தீர்கள்" என்று (மத். XXIV. 40) திருவுளம்பற்றியிருப்பதின் நிமித்தம் இவ்வுலகில் தாழ்ந்த அந்தஸ்திலிருந்தவர்களைத் தம்முடைய பிரதிநிதிகளாகச் செய்திருக்கிறாரென்பதை மறவாதீர்கள்.

சிநேகத்தின் அப்போஸ்தலராகிய அர்ச். அருளப்பர் "என் பிள்ளைகளே, வார்த்தைகளிலும் நாவிலுமல்ல, கிரியையிலும் உண்மையிலும் நேசிப்போமாக" (I

அரு. III. 18) என்று எழுதியிருக்கிறார். சிநேகமானது நம்முடைய எல்லா கிரியைகளிலும், சீவியமனைத்திலும் உள்ளும் புறமும் ஊடுருவினதாயிருக்கவேண்டியது. "சிநேகமோ பொறுமையுள்ளது, தயையுள்ளது; சிநேகங் காய்மகாரப்படாது, அக்கிரமஞ்செய்யாது, அகங்காரப்படாது, வீம்பு பாராட்டாது, சுயநலத்தை விரும்பாது, கோபங்கொள்ளாது, தீங்கு நினையாது, அநியாயத்தின்பேரில் சந்தோஷப்படாமல் உண்மையின்பேரில் சந்தோஷப்படுகின்றது, எல்லாத்தையும் பொறுக்கிறது, எல்லாத்தையும் விசுவசிக்கிறது, எல்லாத்திலும் நம்பிக்கைக்கொள்ளுகிறது, எல்லாத்தையுஞ் சகிக்கிறது" (I கொ. XIII. 4,7). ஆகையால், சிநேகமானது வெறும் பட்சத்திலும், புலன்களின் உணர்ச்சிகளிலும், சிநேகத்தைக் காட்டும்படியான வெறும் வார்த்தைகளிலுமாத்திரமே அடங்கியிருக்கிறதென்றெண்ணுவது பெருந் தப்பிதமாகும். கிரியைகளினால் சிநேகம் வெளிப்பட்டு பலனளிக்கவேண்டியது. "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது; உங்களில் ஒருவன் அவர்களைப் பார்த்துச் சமாதானத்தோடே போங்கள். குளிர் காய்ந்து பசியாற்றுங்கள் என்று சொல்லிச் சரீரத்துக்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?" (இயாக. II. 15, 16). "உங்கள் காரியமெல்லாந் தேவ சிநேகத்தோடே செய்யப்படக்கடவது" (I கொ. XVI. 14). சேசுக்கிறீஸ்துநாதரின் திவ்ய மாதிரிகையைக் கண்டுபாவித்து நடவுங்கள். இவர் தமது சிநேகத்துக்குப் பதில் சிநேகத்தைக் காட்டினவர்களுக்குமாத்திரமல்ல, தம்மைப் பகைத்துத் தம்மை யேற்றுக்கொள்ள மறுத்துவிட்டவர்களுமான எல்லோருக்குமே "நன்மை செய்துகொண்டு சுற்றித்திரிந்தார்" (அப். நட. X. 38). சமாரியா நாட்டின் ஒரு பட்டணத்தார் அவரை யேற்றுக்கொள்ள மறுத்துவிட்டதை யறிந்த இயாகப்பர், அருளப்பர் என்ற சீஷர்கள் அவரை யணுகி: ஆண்டவரே, ஆகாயத்தினின்று நாங்கள் அக்கினியை வரவழைத்து அவர்களைச் சுட்டெரிக்க தேவரீருக்குச் சித்தமா வென்று கேட்டபோது "நீங்கள் எந்த இஸ்பிரீத்துவை யடைந்தவர்களாயிருக்கிறீர்களென்று அறியாதிருக்கிறீர்கள்" என்று சொல்லி, அவர்களைக் கண்டித்தார் (லூக். IX. 52, 55). இதுவே சேசுக்கிறீஸ்துநாதர் நமக்குக் காண்பித்த முன்மாதிரிகை; ஆகையால், அவர் நமக்கு நடந்து காட்டின முன்மாதிரிகையைக் கண்டுபாவித்து நாமும் நடக்கவேண்டும் (I அரு. II. 6).

"அந்தகாரம் நீங்கி இப்போது மெய்யான ஒளி பிரகாசிக்கிறபடியால் அது தன்னிலும் உங்களிடத்திலும் உண்மையாயிருக்கின்றது. பிரகாசத்திலிருக்கிறேனென்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இன்னும் அந்தகாரத்திலிருக்கிறான். தன் சகோதரனை நேசிக்கிறவன் ஒளியில் நிலைத்திருக்கிறான், அவனிடத்தில் இடறலுக்கு ஏதுவில்லை. ஆனால் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருக்கிறான். இருளிலே நடந்து இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகிற இடம் இன்னதென்றும் அறியாதிருக்கிறான்" (I அரு. II. 8, 11).

"நீங்களோ எண்ணிக்கையில் வர்த்திக்கவும், நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கு ஒப்பாக நீங்களும் ஒருவரொருவரோடும் எல்லாரோடும் அன்பில் பெருகவும் ஆண்டவர் செய்து, நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தமது அர்ச்சியசிஷ்டவர்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய சர்வேசுரன் முன்பாகக் குற்றமற்றவர்களும் பரிசுத்தவான்களுமாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவார், ஆமென்." (I தெச. III. 12, 13).

தேவமாதாவின் சுத்திகரத் திருநாளன்று இந்நிருபம் விடுக்கப்பட்டது.

இந்த நிருபமானது நமது அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த எல்லாக் கோவில்களிலும், சிறிய கோவில்களிலும், மடங்களைச்சேர்ந்த கோவில்களிலும் தபசுகாலத்துக்கு முந்திவரும் ஐம்பதாம் நாள் ஞாயிறன்று வாசிக்கப்படக்கடவது.

சர்வேசுரன் உங்களனைவரையும் தமது பரிசுத்த பாதுகாவலில்வைத்துக் காப்பாற்றுவாராக.

கிறீஸ்துநாதரில் உங்கள் பக்திக்குரிய தந்தையாகிய,

ஏ. மோர்க்கேஸ்,
செக்ரடெரி.

✠ அருளப்ப ஆலன்,
சென்னை அதிமேற்றிராணியார்.

குறிப்பு.—சென்ற 1919ஆம் வருஷத்திய தபசுகால ஒழுங்குகளே நிகழும் 1920ஆம் வருஷத்திலும் அனுசரிக்கப்படவேண்டியதாகையால், அவைகளை நாளது தபசுகாலத்துக்கு முந்திவரும் ஐம்பதாம் நாள் ஞாயிறன்று பிரசித்தஞ்செய்யவும்.

# HISTORY OF ST. MONICA.

# அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

*(All Rights Reserved.)*

## 6-ம் அதிகாரம்.

மனேக்கியர்களின் பதிதமதம் கிறீஸ்து வேதத்தைப் பரீட்சைசெய்து, தன்னிடம் தாழ்ச்சியும் பரிசுத்தத்தனமும் இல்லாத குறையால், அதன் போதனையைக் கண்டுபிடிக்க இயலாமல், அகுஸ்தீன் மனேக்கிய பிரிவினையில் சேருதல்—அர்ச். மோனிக்கம்மாளுடைய அதிசயத்துக்குரிய நடத்தை—கர்த்தர் அவளுக்காறுதலளிக்கிறர்—அவ்வளவு அழுகைப் பிரலாபத்துடன் அவருக்காக அவள் கர்த்தரை நோக்கி மன்றடிவர, அவர் சேதமடைவது கூடாத காரியம்.

(கி. அ. 374—377.)

(முன் தொடர்ச்சி.)

அகுஸ்தீன் மனேக்கியப் பிரிவினை சபையில் சேர்ந்தது, இரட்சண்ய 374-ம் வருஷத்தில் என்று குறிக்கிருர்கள். அச்சபையிலிருந்து அவரேன் நீங்கிவரவில்லையென்று நாம் பின்னுக்குக் காண்போம். சத்தியத்தைத் தேடும் விஷயத்தில் அவர் எப்படிப்பட்ட ஆவலும் சுத்த எண்ணமும் காட்டினரோ, அதே ஆவலோடும் சுத்த எண்ணத்தோடும் இந்த மனேக்கியப் பிரிவினை சபையிலும் மற்றும் இதைப்போலொத்த பொய்ச் சபைகளிலும் சேர்ந்தார். நேர்மையும் சுத்த எண்ணமும் நல்ல விஷயங்களில்மாத்திரம் கௌரதையும் நன்மையுமாயிருக்குமேயொழிய, துர் விஷயங்களிலும் அப்படியேயிருக்குமோ?

தன்னை மனேக்கிய சபையின் அப்போஸ்தலனுக ஏற்படுத்திக்கொண்டு, அத்தியந்த உற்சாகத்துடன் அதைப் பரப்பத் தொடங்கினர். கத்தோலிக்கர்களைப் பார்த்து “என்னிடம் வேத தர்க்கத்திற்கு வாருங்கள்” என்று கூப்பிடுவார். அவர்களும் அவரது கோரிக்கைக்கிசைந்து வந்தாலும், எப்போதும் அகுஸ்தீனே ஜெயங்கொள்வார். இதனால் கத்தோலிக்கு கிறீஸ்துவர்களுக்கு எப்படிப்பட்ட கௌரவ நஷ்டம்! இதைவிட அகுஸ்தீனுக்கு எப்படிப்பட்ட ஞான நஷ்டம்! இவ்வித தர்க்கங்களில் அவர் அடையும் வெற்றியால் மேன்மேலும் கர்வங்கொண்டு, கடைசியாய் துர்போதனையில் சிக்கிப் போகிறவர்களுக்கு நேரிடும் பெரிய அபாயத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் விழுந்தார். அதாவது, அவருக்கு ஆங்காரம் மண்டைக்கேறவே, யாரும் எனக்குச் சமானமில்லையென்பார். எவ்வித கட்டுக்கு மடங்கமாட்டார். மெத்தவும் மூர்க்ககுணமுள்ளவரானர். அகுஸ்தீன் தன் சிநேகிதர்களோடும் பள்ளித் தோழர்களோடும் செய்யும் தர்க்கங்களிலும் வெற்றிபெற்றுவந்தாரென்று சகஜமாய் யூகிக்கலாகும்.

இவரது சுபாவம் பிறர் மனதைக் கவரத்தக்க சுபாவம். தன்னை நேசிப்பவர்களை அத்தியந்த உக்கிரத்துடன் நேசித்துவருவார். ஆதலால் இவருக்குச் சில சிநேகிதர்கள் ஏற்பட்டு, அவர்கள் மத்தியில் ஒரு நெற்றித்திலதம்போல் விளங்கிவந்தார். இவரது உற்ற நேசராகிய உரோமானியானுஸ் என்பவரைப்பற்றி நாம் முன்னமே கொஞ்சம் கண்டிருக்கிறோம். சரித்திரம் போகப்போக மற்ற சிநேகிதர்கள் யாரென்று

நமக்குத் தெரியவரும். அவர்கள் யாரெனில், கற்பும் சாந்தமுமுள்ள அலிப்பியூஸ், சிறு பிள்ளையைப்போல் நிஷ்கபடகுணமுள்ள நெபரிதியூஸ், சத்தியம் என்னும் வார்த்தையைக் கேட்டதும் வைராக்கியங்கொள்ளும் ஹொனுராஷியூஸ் ஆகிய இவர்களே. "அன்பிலாரெல்லாந் தமக்குரிய ரன்புடையா ரென்பு முரியர் பிறர்க்கு" என்றபடி, இந்தச் சிநேகிதர்களையெல்லாம் அவர் எவ்வளவோ உருக்கமாய் நேசித்துவந்தார். அவர்களுடைய சகவாசத்தில் தனக்குண்டான மனோரம்மியத்தை எவ்வளவோ நேர்த்தியாய் விவரித்திருக்கிறார். சிநேகிதர்கள் கூடி சம்பாஷணை செய்வதும், ஒருமித்து நல்ல புஸ்தகங்களை வாசிப்பதும், ஒருவர்க்கொருவர் பரிகாசம் செய்வதும், பிறகு கண்டிப்புடன் நடந்துகொள்வதும், மனிதன் தன் அபிப்பிராயத்தைத்தானே ஒத்துக்கொள்ளாததுபோல், சில சமயங்களில் மனக்குரோதமின்றி ஒருவருடைய அபிப்பிராயத்திற்கு ஒருவர் இணங்காதிருப்பதும், இப்படி சில விஷயங்களில் இணங்காதிருந்தாலும், மற்ற விஷயங்களில் பொதுப்பட இணங்கியிருப்பதும், ஒருவர் இன்னொருவருக்குக் கற்பிப்பதும், இன்னொருவரிடமிருந்து ஏதாவதொன்றைக் கற்றுக்கொள்ளுவதும், மேலும் இந்த சிநேகிதர்களை நினைத்து விசாரங்கொண்டு எப்போது வருவார்களோவென்று ஆசைப்படுவதும், அவர்கள் வந்தவுடன் சந்தோஷத்துடன் அவர்களுக்கு நல்வரவு கொடுப்பதும், ஆகிய இவையாவும் மாதுரியமானவையே. பரஸ்பர பட்சத்துடன் ஒருவரையொருவர் நேசிக்கும் சிநேகிதர்களுடைய இருதயங்களிலிருந்து புறப்படும் நேச குறிப்புகளை, சம்பாஷணை காலங்களில் அவர்களுடைய முகங்களிலும் உதடுகளிலும் கண்களிலும் காணக்கூடும். இவைகளே ஆத்துமங்களை உருக்கி ஒன்றாய்த் திரட்டும் அக்கினிக்குச் சமானம்.

அகுஸ்தீனுடைய இருதயம் பட்சபாசம் நிறைந்தது. அவர் யாரையும் உருக்கமாய் நேசிப்பார். அப்படியே யாவரும் அவரை உருக்கமாய் நேசிப்பார்கள். தனக்கும் தன் சிநேகிதர்களுக்கும் இருந்த பாசபந்தனத்தினால், அவர் ஆப்பிரிக்காவைவிட்டுப் புறப்பட்டுப் போனபோது, அவர்களும் அவரைப் பின்தொடர்ந்து அவருடன் உரோமைக்கும், மிலானுக்கும், ஆஸ்டிரியாவுக்கும் மற்றும் அவர் போன விடங்களுக்கெல்லாம் கூடப்போனார்கள். அவரை ஒரு முறை அறிந்தபிறகு அவரைவிட்டுப் பிரிந்திருப்பது கூடாமை. ஆதலால் அவர் சேர்ந்த மனேக்கிய சபையில் இவர்களும் சேராமலிருக்க முடியவில்லை. உண்மையாகவே, அலிப்பியூஸும், பொஹொராஷியூஸும், நெப்ரிதியூஸும், உரோமானியானூஸும், இன்னொரு வாலிபனும் அவரோடு அப்பிரிவினை சபையில் சேர்ந்துவிட்டார்கள். கடைசியாய்ச் சொன்ன இந்த வாலிபன் செத்தபோதுதான் அகுஸ்தீன் கண்ணீர் சிந்தி அழுதார்.

அர்ச். மோனிக்கம்மாள் மிக்க ஜாக்கிரதையாயிருந்து தன் குமாரனுடைய நடபடிக்கைகள் யாவையும் அத்தியந்த கவனத்துடன் பார்த்துவந்தாள். துர் ஆசாபாசப் போராட்டத்தினால் அவர் விசுவாசத்தை இழந்துபோனதையும் கண்டாள். அவர் ஆர்டென்ஸியூஸ் புஸ்தகத்தை வாசித்தபிறகு, உலக காரியங்களின் மட்டில் வெறுப்பும், சத்தியத்தின்மட்டில் ஆசையும் அவருக்குண்டானதைக்கண்டு, அவளுக்குக் கொஞ்சம் நம்பிக்கை பிறந்திருந்தபோதிலும், அவர் வேதாகமங்களை நிராகரித்துத் தள்ளி, திருச்சபையின் அதிகாரத்தை அவமதித்துப் பேசி, தன் புத்தித்திறமையின்மட்டில் மிஞ்சிய பெருமை கொண்டதைக் கண்டபோது, தன் நம்பிக்கையாவும் ஒழிந்துபோயிற்று. அவரது ஆத்தும இரட்சண்ணியத்திற்கு இன்னும் என்னென்ன ஆபத்துகள் உண்டாகப்போகின்றனவோவென்று, நடுக்கத்துடன் யோசித்தாள். ஒருவன் சமுத்திரப் பிரயாணஞ்செய்யக் கப்பலேறியபிறகு, சமுத்திரம் கொந்தளிப்படைவதையும், பாய்மரங்கள் கிழிபடுவதையும், நங்கூரங்கள் இழுக்கப்படுவதையும், அவனுடைய தாயானவள் கரையோரத்திலிருந்து பார்த்து, அக்கப்பல் தப்பாமல் சேதமேயடையுமென்று கண்டால், எவ்வாறு தன் கைகளை முறித்துக்கொண்டு ஐயோவென்று அலறிப் பதறி ஆறாத் துயரங்கொள்வாளோ, அம்மேரையாகவே, மோனிக்கம்மாளும் தனது குமாரனுடைய ஆத்தும நிலைமையைக்கண்டு வியாகுல சாகரத்தில் அமிழ்ந்திப்போனாள்.

அகுஸ்தீன் மூர்க்கத்தனமாய் மனேக்கிய பிரிவினை சபையில் சேர்ந்துவிட்டாரென்றும்; அத்தியந்த வைராக்கியத்துடன் அதற்காகப் பாடுபடுகிறாரென்றும், அவருடைய முயற்சியால் தகாஸ்தேயின் நிவாசிகளாகிய அலிப்பியூஸும், ரோமானியானூஸும், இன்னொரு சிநேகிதனும்,

அச்சபையைத் தழுவிக்கொண்டார்களென்றும், அவருடைய நேசர்கள் துக்க பரிதாபத்துடன் மோனிக்கம்மாளிடம் சொன்னபோது, அவளடைந்த வியாகுலத்திற்குமுன், இதுவரைக்கும் அவளநுபவித்த வியாகுலம் ஒன்றுமில்லாததுபோல் தோன்றிற்று. அவளது விதனப்பெருக்கத்தை எதற்கு ஒப்பிட்டு விளக்கிக் காட்டக்கூடுமென்று அகுஸ்தீன் யோசித்து, அவளது கண்களிலிருந்து கண்ணீர் ஓயாமல் வடிந்து ஒழுகிற்றென்றும், அதன் பெருக்கமானது கரைபுரண்டோடும் நதிகளுக்குச் சமானமாயிருந்ததென்றும், பலவிதமான வாசாலத்துடன் சொல்லியும், அவ்வுவமானங்களினால் அவள் துயரத்தை சரியான பிரகாரம் எடுத்துரைக்கமுயடிவில்லையென்றுணர்ந்து, கடைசியாய் அவளது துயரத்தைத் தனது ஏக குமாரனை யிழந்த தாய் அனுபவிக்கும் துயரத்திற்கு ஒப்பிடுகிறார். "ஏனெனில் கர்த்தாவே! அவள் உம்மிடமிருந்து அடைந்திருந்த விசுவாசத்தின் பலனால், என்னையொரு செத்தவனாகப் பாவித்து, தாய்மார் தம்மக்கள் உயிரிழந்தபோது அநுபவிக்கும் துயரத்தைக் காட்டிலும் அதிகமான துயரத்தை அநுபவித்தாள்."

ஆயினும் மோனிக்கம்மாள் அழுதுகொண்டு மாத்திரம் இருந்தவளல்ல. தன் குமாரன் பாவத்தில் விழுந்தபோதிலும், மனசாட்சியின் கண்டனைக்குட்பட்டு, விசுவாசத்தின் பலனால், ஒரு நாள் மனந்திரும்பி நல்வழிக்கு வருவாரென்னும் நம்பிக்கையும் அவளுக்கிருந்தபடியால், ஏதோ அவருடைய நிர்ப்பாக்கிய வந்தஸ்தை யெண்ணி கண்ணீர்சிந்தி யழுதுவந்தாள். ஆனால் அவர் தனது பாவங்களினால் கடவுளுக்குத துரோகஞ் செய்வது பற்றாமல் சேசுக்கிறீஸ்து நாதரையும் மறுதலித்து, பிரிவினை சபையில் சேர்ந்தார் என்று அவளறிந்தபோது, தனது குமாரன் இரட்சண்யத்தைப்பற்றி இனி அழுவதுமாத்திரம் போதாது, அதற்காக அத்தியந்த ஊக்கத்துடன் உழைக்கவும் வேண்டுமென்று உணர்ந்தாள்.

பள்ளிக்கூட விடுமுறை நாட்கள் கிட்டிவந்தன. அகுஸ்தீனும் தகாஸ்தேயுக்கு வருகிற காலமாச்சுது. அவர் பிரிவினைச் சபையில் சேர்ந்துவிட்டாரென்று, அவருடைய வாய்ப் பிறப்பாலேயே அறியவேண்டுமென்று மோனிக்கம்மாள் காத்திருந்தாள். ஏனெனில், தன் குமாரன் அப்படிப்பட்ட பாதகத்துக்குள்ளாயிருப்பாரென்று பிறர் பேச்சைக்கொண்டு அவள் நம்பமுடியவில்லை. ஆதலால் தங்கள் பிள்ளைகளின் மட்டில் பட்சங்கொண்டிருக்கும் சகல தாய்மார்களைப்போல், தன் குமாரன் அவிசுவாசியானனென்று நம்பியும் நம்பாமலும் இருந்தாள். ஆனால் உண்மை தெரியவந்தது. தான் பிரிவினை சபையில் சேர்ந்தது தன் தாய்க்குப் பிரியமில்லையென்று அகுஸ்தீன் கண்டுகொண்டு, இவ்விஷயங்களிலெல்லாம் கேவலம் பெண்பிள்ளைகள் தலையிட என்ன காரணம் என்று உரோஷங்கொண்டு, இப்படிச்செய்வது ஒரு தாயாருக்கு தன் பிள்ளையின்மட்டில் உண்டான கடமையென்றுஅந்தகத்தோலிக்குவேதந்தான் போதிக்கிறதென்று அவ்வேதத்தின்மட்டில் வெறுப்புகொண்டு, பிரிவினை சபையானுக்கடுத்த ஆங்காரத்துடன் தன் தாய் வீட்டுக்குத் திரும்பிவந்து "ஓ, தாய்க்கடுத்த கடினமான கடமையே, நான் எதையும் என் மனம்போல் செய்ய முடியவில்லையே, எதிலும் தலையிட்டுவருகிறாயே" என்று தன் தாயை அதட்டி, முதல் வசனமாகத் தன் பொய்ச் சபையின் போதனையைக் காட்டினார். அப்போது அர்ச். மோனிக்கம்மாளுக்கு எரிச்சலுண்டாயிற்று. அகுஸ்தீன் சொன்ன வார்த்தைகளால் தனக்குண்டான அவமானத்தையும், தனது தூய நேசம் நிறைந்த உணர்ச்சிகளுக்குண்டான பங்கத்தையும் உணர்ந்தாள். அவளது தேவசிநேகமும், சத்திய திருச்சபையின்மட்டில் அவளுக்கிருந்த பற்றுதலும், நெறிதவறிப்போன தனது குமாரனை நல்வழிக்குக் கொண்டுவர அவளிடம் விளங்கிய உருக்கப் பெருக்கமும், நித்தியத்திற்கும் அவரை யிழந்துபோவேனோ என்று அவள் கொண்டிருந்த பயமும், பிரிவினை சபையின்மட்டில் அவளுக்கிருந்த வெறுப்பும், ஆகிய இவ்வுணர்ச்சிகளெல்லாம் ஒன்றுகூடி, ஞான வைராக்கியம் நிறைந்த ஒரு காரியத்தைச் செய்தன. இப்படிப்பட்ட காரியத்தை அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரங்களில் எங்கும் காணக்கூடவில்லை. தேவ தூஷணங்களைப்போதிக்கும் அப்பொய்ச் சபையின்மட்டில் அவளுக்குக் கோபம் பொங்கி "நெறிகெட்ட இப்படிப்பட்ட குமாரன் என் எதிரில் நிற்பதையும், என் வீட்டில் வசிப்பதையும், என்னோடு ஒரே பந்தியாய் சாப்பிடுவதையும், ஒருபோதும் சகிக்கமாட்டேன்" என்று ஒரே கண்டிப்பாய் தீர்மானித்து, அப்படிப்பட்டவனைத் தன் வீட்டிலிருந்து துரத்துவதே தன் கடமையென்பதாயு

ணர்ந்து, அகுஸ்தீனைப் பார்த்து "ச்சீ வெளியே போ, என் வீட்டில் கால்வைக்காதே" என்று முகமுறியப் பேசினாள். அவர் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மறுத்துப் பேச வாயெழாமல், தன் சிநேகிதராகிய உரோமானூஸ்-டைய வீட்டுக்குப் போய்விட்டார்.

இப்படி தாய்மார் தங்கள் பிள்ளைகளை அவ்சியம் நடத்தவேண்டியிருப்பது கொடியதே. அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில், கர்த்தர் அத்தாய்மார்களுக்குச் சகாயமாக வராவிட்டால், அவர்கள் துக்கசாகரத்தில் அமிழ்ந்திப்போவார்கள். மோனிக்கம்மாளுக்கு இதுவரைக்கும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களெல்லாம் நேர்ந்தன. அவைகளைப்பற்றி யவள் அத்தனை கஸ்திபட்டதே கிடையாது. ஆனால் தன் மகன் அவிசுவாசியாய்ப்போய், பிரிவினை சபையில் சேர்ந்தான் என்றறிந்தபோதோ, அவள் இருதயம் வியாகுல வாளால் ஊடுருவப்பட்டது. அத்துக்க மிகுதியால்தான் அகுஸ்தீனை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாள். அவரும் வெளியே போய்விட்டார். மோனிக்கம்மாள் தன் குமாரனை எவ்வளவு பட்சத்துடன் நேசித்துவந்தாளெனில், ஒரு நாளாகிலும் அவருடைய முகத்தைப் பார்க்காதிருக்க அவளால் முடியாது. ஆதலால் மறுபேச்சு பேசாமல் அவர் வீட்டைவிட்டுப் போனதும், தாய்க்குரிய பாசநேசத்தால் தூண்டப்பட்டவளாய், முழந்தாளூன்றி தாரைதாரையாய்க் கண்ணீர் சிந்தி, தேவசகாயத்திற்காக கர்த்தரைப் பார்த்து கெஞ்சி மன்றாடினாள்.

கர்த்தர் அவளது மன்றாட்டிற்குச் செவிசாய்த்தார். எங்ஙனமெனில், அன்றிரவுதானே, அவள் துக்க மிகுதியால் சோர்ந்து சற்று படுத்துறங்கினபோது, ஒரு சொப்பனம் கண்டாள். அதேதெனில், ஒழுங்காய் செதுக்கப்பட்ட ஒரு சட்டத்தின்பேரில் தான் துக்க விசாரத்துடன் நின்றிருப்பதாகவும், அழகு சவுந்தரியமுள்ள ஒரு வாலிபன் மலர்ந்தமுகத்துடன் புன்னகைப்போடு தன்னை நோக்கி வருவதாகவும் கண்டாள். மேலும், அவ்வாலிபன் தனக்காறுதலளிக்கும் நோக்கமாய் அவளைப் பார்த்து: நீ நித்தமும் கண்ணீர்சிந்தி அழுது விதனப்படுவதற்குக் காரணமேதென்று கேட்டபோது, தான் தனது குமாரன் விசுவாசத்தை யிழந்து கெட்டுப்போனதைப்பற்றி சஞ்சலப்படுவதாய் மறுமொழி சொன்னதாகவும், அதற்கவர் விசனப்படவேண்டாமென்று தேற்றி, அவள் நின்று கொண்டிருந்த மரச்சட்டத்தைச் சுட்டிக்காட்டி, "நீ எங்கே இருக்கிறாயோ, அங்கேயே உன் பிள்ளையுமிருக்கும்" என்று சொன்னதாகவும், அச்சமயத்தில் தன் குமாரன் தன் பாரிசமாய் அதே சட்டத்தின்பேரில் நின்றிருந்ததாகவும் கண்டாள். இச்சொற்பனத்தை அர்ச். அகுஸ்தீன் விவரித்து "கர்த்தாவே, என் தாயின் மன்றாட்டிற்கு நீர் செவிசாய்த்ததினாலன்றி, மற்றப்படி இவையாவும் சம்பவித்ததெப்படி!" என்று சொல்லுகிறார்.

துக்க மிகுந்தவளாய், மோனிக்கம்மாள் உடனே உரோமானியானூஸ்-டைய வீட்டை நாடிப்போய் தான் கண்ட சொப்பனத்தை அகுஸ்தீனுக்குத் தெரிவித்தாள். அகுஸ்தீன் கவனத்துடன் அதைக் கேட்டார். தன் தாயாருடைய நேர்மைத்தனத்தின்மட்டில் அவருக்கு நம்பிக்கையிருந்தபடியால், கனவின் உண்மையைப்பற்றி யொன்றும் சந்தேகிக்கவில்லை. ஆனால் அச்சொப்பனத்தைத் தனக்கேற்றபடி அர்த்தம்பண்ணிக்கொள்ளப் பிரயாசைப்பட்டார். "தான் எங்கிருந்தாரோ அங்கேயே மோனிக்கம்மாளும் ஒரு நாளிருப்பா"ளென்று அவர் வியாக்கியானித்தார். அதற்கு அர்ச்சியசிஷ்டவள் மறுமொழியாக "இல்லை, இல்லை உன் பிள்ளை யிருக்கிறவிடத்தில் நீ யிருப்பாயென்றல்ல, ஆனால் நீ யிருக்கிற இடத்தில் உன் பிள்ளையுமிருக்குமென்றே யவர் சொன்னார்" என்றாள். மோனிக்கம்மாள், தான் படவேண்டிய துக்கமெல்லாம்பட்டு கண்ணீர்சிந்தியழுது, கர்த்தரை நோக்கி மன்றாடிவந்ததால், சீக்கிரத்தில் அவர் குணமடைந்து கண்டிப்பாய் தன் பக்கம் சேர்வாரென்று அவளுக்கு நம்பிக்கையிருந்தது. "ஆதலால் ஐயோ, இன்னும் கொஞ்சகாலம் சகித்து காத்திராமல், பொறுமை தப்பி, இதற்குள் என் குமாரனை வீட்டைவிட்டு துரத்திவிட்டேனே" என்று தன்னைத்தானே கண்டித்துக்கொண்டு, இப்படி யவரைத் துரத்திவிட்டது தனக்கும் அவருக்கும் அத்தியந்த விசனத்திற்கு காரணமல்லவோ என்பதாயுணர்ந்து, அவர் தன் வீட்டிற்கு வரவும், தன்னோடு ஒரு பந்தியில் சாப்பிடவும் அநுமதியளித்தாள்.

இது செப்டெம்பர் மாசத்திய விடுமுறை நாட்களில், கர்த்தர் அவதரித்த 374-ம் வருஷத்தில் நடந்தேறியது. சீக்கிரத்தில் அகுஸ்தீனுக்கு 20 வயது முடிந்தது. அவரும் தன்

படிப்பை முடித்து கார்த்தேஜ் நகரை முற்றிலும் விட்டுவிட்டு தகாஸ்தேயுக்குப் போய்விட்டார். அவர் அதிக திறமையுள்ளவராயும் ஜனப் பழக்கமுள்ளவராயுமிருந்தபடியால், நியாயவாதி அல்லது லாயர் உத்தியோகமே அவருக்குச் சரியென்று யாவரும் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட உத்தியோகத்தை யவர் வகிக்குமுன், தகாஸ்தேயிலேயே வாக்கலங்கார வித்தையைக் கற்பிக்கும் பள்ளிக்கூடமொன்றை ஸ்தாபித்தார்.

ஆனால், ஐயோ! அவர் தகாஸ்தேயுக்கு வரும்போது தனியாய் வராமல், தன் வைப்பாட்டியையுங்கூட அழைத்துக்கொண்டுவந்தார். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், தன் தாய் வீட்டில் போயிருப்பது முழுதும் கூடாத காரியமென்று சொல்லவும் வேண்டுமோ? ஆகையால், அவர் தன் தாய் வீட்டை நாடிப்போகாமல், உரோமானியானூஸ் கொடுத்த ஒரு வீட்டில் தங்கியிருந்தார். ஆயினும், அடிக்கடி தன் தாய் வீட்டுக்குப்போவார். அவர் சொல்வது : "என் தாய் என்மட்டில் கொண்டிருந்த பட்சம் எவ்வளவென்றால் நான் துக்கமுகத்தோடிருப்பதைப் பார்க்கச் சகிக்கமாட்டாள். ஒரு நாள் என்னைக் காணாதிருந்தால் அவளுக்குத் திருப்தியிராது."

இது ஆச்சரியமன்று. ஆனால் அவர் விபசாரராயும், பிரிவினை சபையாராயுமிருந்தபோதிலும், அவரே அவளுக்கு நேசமும் பிரமாணிக்கமுமுள்ள உற்ற மகன்.

(இன்னும் வரும்.)

## ST. JOSEPH.
## அர்ச். சூசையப்பர்.

சுதனாகிய சர்வேசுரன் மட்டிலடங்காத நேசத்தால் தூண்டப்பட்டவராய்ப் பாவிகளான மனுக்குலத்தோர் எல்லோரையும் இரக்ஷிக்க மானிட தேகத்தை யெடுக்கச் சித்தங்கொண்டு, இப்புவியில் ஞான சூரியனாக உதயமானாரென்று நாம் எல்லோரும் உறுதியாக விசுவசித்து வருகிறோமல்லோ? அவ்வித உத்தம நேசக் கிருத்தியத்தில் அவருக்குத் துணையாக நின்று உதவிபுரிந்துவந்த புண்ணியசீலர்கள் எல்லோரும் நமது நேசத்துக்கும், நன்மைக்கும், புகழ்ச்சிக்கும் உரியவர்களென்பது தெளியக் கிடக்கின்றது.

கன்னிமரியம்மாள் திவ்ய இஸ்பிரீத்து சாந்துவானவரால் ஏவப்பட்டவளாய் அர்ச். சூசையப்பரை மணம்புரிந்து, இருவரும் ஒரே வீட்டில் வாசஞ்செய்தாலும், சமுசார வாழ்க்கையென்ப தொன்றுமில்லாமல், சிற்றின்பங்களைக் கனவிலும் நினையாமல், ஒரே தாய் வயிற்றிற் பிறந்த இரு சகோதரர்களைப்போல் ஜீவித்ததும், இஸ்பிரீத்துசாந்துவினுடைய அநுக்கிரகத்தினால் தேவமாதா கன்னிமைகெடாமல் சுதனாகிய சர்வேசுரனை அற்புதமாகக் கருப்பம் தரித்ததும், பெத்திலேம் பட்டணத்தில் பந்து மித்திரரால் புறக்கணிக்கப்பட்டுத் தங்க இடமில்லாமல் இவர்களிருவரும் திகைத்து நின்றதும், மிருகங்கள் அடையும் ஓர் சிறிய குகையை இவர்கள் அண்டிப்போய் அவ்விடத்தில் தங்கியிருக்கையில் திக்கற்ற பரதேசியாக அமலனான சேசுவைக் கன்னிமரியாயி பெற்றெடுத்ததும், பக்ஷத்தோடு பாலூட்டி தாலாட்டி, பாராட்டிச் சீராட்டி கண்ணின் கருமணியைப்போல் அவரை வளர்த்துக் காப்பாற்றி வந்ததும், கொடிய எரோதன் வர்மத்தினின்று காப்பாற்ற இவர்கள் அவரைத் தூக்கிக்கொண்டு பரதேசஞ் சென்றதும், அஞ்ஞான இராஜ்ஜியத்தில் திவ்ய பாலனையும் அவருடைய திருத் தாயாரையும் போஷிக்க அர்ச். சூசையப்பர் பெரும் பிரயாசை, கஸ்தி, சஞ்சலப்பட்டதும் ஆகிய இவற்றையெல்லாம் நாம் சற்று கூர்ந்து யோசிப்போமானால், நமது இரட்சண்ய விஷயத்தில் அர்ச். கன்னிமரியாயியைப் போலவே, அவருடைய அரிய பர்த்தாவாகிய அர்ச். சூசையப்பரும் ஈடுபட்டவரென்றும், ஆனபடியால் நாம் அவருக்கு அத்தியந்த பக்தி, விசுவாசம் நிறைந்த நன்றியறிதலை அவருடைய வணக்கமாதமான இம் மாதத்தில் விசேஷமாய்க் காட்ட கடமைப்பட்டுள்ளோமென்றும் நமக்கு இனிது விளங்கும். அர்ச். மரியாயிக்குப் பிறகு மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுக்கு நாம் செலுத்தும் வணக்கம், ஸ்துதி தோத்திரங்களைவிட அர்ச். சூசையப்பருக்கு அதிகமாய்ச் செலுத்தவேண்டுமென்பதற்கு

மேற்குறித்த ஒரு காரணமே போதிய சான்ருகும்.

ஆம், தேவமாதாவுக்குப்பின் அர்ச். சூசையப்பர் நமது தோத்திரம் புகழ்ச்சிக ளுக்கு உரியவராயும், பரலோகத்தில் அவ ருடைய திருக் குமாரனுல் நன்கு மதிக்கப் பட்டு நமக்காக பரிந்துபேச மிகவும் சுதந் தரமும் செல்வாக்குமுடையவராயும் இருப்பதால், சர்வேசுரன் அவர் மூலமாக நமக்கு ஏராளமான வரப்பிரசாதங்களைப் பொழிகிருரென்று நம்புவதற் கையமில்லை.

இவ்வித உத்தம நம்பிக்கையால் ஏவப்பட்ட ஒன்பதாம் பத்திநாதரென்னும் அர்ச். பாப்பானவர் வத்திக்கான் பொதுச் சங்கத்தில், பூர்வம் பாரவோன் அரசன் எப்படி பிதாப்பிதாவாகிய சூசையைத் தன் இராஜ்ஜிய அதிகாரியாக நியமனஞ்செய்து "சூசையிடம் போங்கள்" என்று ஜனங்களுக்கு கட்டளையிட்டானே அப்படியே, சேசுநாதருடைய கைத்தாதையான அர்ச். சூசையப்பரை திருச்சபையின் பாதுகாவலராக நியமித்து, விசுவாசமற்ற இக்காலத்தில் நம்மெல்லோரையும் அவருடைய பாதுகாவலை நாடிச்செல்லக் கற்பித்திருக்கிருர்.

சில வேதபாரகர்கள், அர்ச். சூசையப்பர் உரோமாபுரி இராயனுன அகுஸ்துஸ் என்பவன் மகுடாபிஷேகம் அடைந்த வருடத்தில் பிறந்ததாகக் கூறியுள்ளார்கள். அப்படியானல், அர்ச். சூசையப்பர் மணமுடித்துக்கொண்டபோது நாற்பது வயதுடையவராயிருந்திருக்கவேண்டும். சேசுநாதர், அகுஸ்துஸ் இராயன் ஆண்டுவந்த 42-ம் வருடத்தில் பிறந்தாரென்றும் எழுதப்பட்டிருக்கிறது. பிளீனி, செனெக்கா, சுயேத்தோனியுஸ் என்னும் அஞ்ஞான சாஸ்திரிகள் எழுதி வைத்ததை நாம் நம்பக்கூடுமானல், அகுஸ்துஸ் அரசனுக்கு மகுடாபிஷேகமான தினத்தில் நடந்த ஓர் அற்புத சம்பவம் அவனுக்காகவே நிகழ்ந்ததெனச்சொல்லி அதுபற்றி அவனை அவர்கள் புகழ்ந்தேற்றிக் கொண்டாடினதை மறுத்து, அர்ச். சூசையப்பருக்கே அச்சம்பவத்தைக் குறிப்பிடுவது நியாயமென புலப்படும். அவ்வற்புத சம்பவமேதெனில் :—மகுடாபிஷேகத்தின் அதிகாலையில் சூரியன் உதயமானபோது கோதுமைக் கதிர் உருவாக அமைந்த நக்ஷத்திரங்கள் சூரியனில் தோன்றினதுமல்லாமல், அலங்காரமான நானு வர்ண வானவில்லொன்று அதைச் சுற்றிலும் ஜொலித்ததைக் கண்டு சகலரும் மகிழ்ச்சியடைந்தார்கள் என்பதே.

இசராயேலரை பாதுகாக்கும்படியாக சர்வேசுரனுல் தெரிந்துகொள்ளப்பட்ட பிதாப்பிதாவான சூசையின் மகிமைப்பிரதாபம் அவர் கண்ட இரு கனவினுல் சுட்டிக்காட்டப்படவும், பாரவோன் கண்ட கதிர்களின் கனவினுல் அவர் எஜிப்து தேசத்தின் மந்திரியாக நியமிக்கப்படவுஞ் சித்தங்கொண்ட சர்வேசுரன், மனுக்குலத்தை இரட்சிக்கத் தம் ஏக குமாரனை இப்பிரபஞ்சத்துக் கனுப்பத் திருவுளங் கனிந்தபோது, பரலோக அப்பமும், நீதி சூரியனுமான அவருக்குத் கைத்தாதையாக தாம் நியமித்த அர்ச். சூசையப்பரின் பிறப்பை அறிவிக்க, அவர் சூரியன்மீது ஆச்சரியக் கதிரின் காக்ஷி ஜொலிக்கச் செய்தாரென்னத் தகாதோ?

பாரம்பரை சரிதையினுல் தெரியவருகிறதுபோல் அர்ச். சூசையப்பர் மார்ச்மீ 19உ மரணமடைந்தார். ஆனபடியால் அன்று அவருடைய திருநாளை திருச்சபை கொண்டாடுகிறது. சுவிசேஷத்திற் சொல்லப்பட்டுள்ளபடி அவர் வேத நியமங்களை அணுவளவேனுந் தவருமல் அநுசரித்துவந்தவராதலால், பாஸ்குத் திருநாளைக் கொண்டாட ஜெருசலேம் பட்டணத்திற்குப் போயிருந்தபோது, கன்னித்தாயார் அருகில் நிற்க, தம் பிரிய குமாரனை சேசுநாதருடைய திருக் கரங்களில் மரணமடைந்து, ஜோசபாத் கணவாயில் பூச்சியமாக பூஸ்தாபகஞ் செய்யப்பட்டார். அவர் தேவமாதாவைப்போல தமது 72-ம் பிராயத்தில் மரணமடைந்தாரென்று தெரியவருகிறது.

இப்புண்ணிய சீலரைப் பிற்காலத்தில் வேதசாஸ்திரிகள், வேதபாரகர்கள் கோடித்து வாழ்த்திவந்தனர், இவருடைய அடைக்கலத்தை அண்டினேர் அவலமானதில்லையென்று அர்ச். தெரேசம்மாள் வாக்கிட்டதை நாமும் விசுவசித்து,

அவருடைய அரிய சனுகைத் தேடிப்போவோமாக.

எவ்வுயிரும் ஈன்றவனை என் மகனென்றே யேந்திக்
கவ்வி நின்முன் ஓர் முனிவன் கண்டுகொண்டேன்—
[செவ்விதிகழ்
தன் மனையாளோ கன்னி தானோ பெருந் தவசி
என்ன புதுமை இது?

அர்ச். தெரேசம்மாள் தம்முடைய சீவிய சரித்திரத்தில் எழுதியிருப்பதேதெனில்:—"மற்ற அர்ச்சியசிஷ்டவர்கள் சிற்சில விசேஷ சந்தர்ப்பங்களில் மாத்திரம் நமக்கு உதவி செய்யக் கடவுள் அவர்களுக்கு வல்லமை தந்திருக்கின்றார். ஆனால், நான் அநுபவத்தில் கண்டிருப்பதுபோல் மகிமையி லிலங்கிய இந்த அர்ச்சியசிஷ்டவர் எல்லா சமயங்களிலும் நமக்கு உதவி செய்ய வரம்பெற்றிருக்கின்றார்..........அநேக வருஷங்களாக அவர் திருநாள் தினத்தில் ஏதாவது ஒரு சகாயத்தை யான் அவரிடம் கேட்பது வழக்கம். என் மன்றாட்டு எப்போதும் அளிக்கப்பட்டேவந்தது......ஆனால் எவனொருவன் என் பேச்சை நம்பமாட்டானோ அவன்தானே இதைப் பரீட்சைசெய்து பார்க்கும்படியாக தேவநேசத்தின்பேரால் அவனைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்பதாமே. அப்படியானால், அர்ச். சூசையப்பருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் இந்த மார்ச்சு மாதத்தில் அவரை விசேஷமானவிதமாய் நாடிப்போய் அவர் ஆசீர் அடைவோமாக. அர்ச். ஆகிர்தமரியம்மாள் எழுதிவைத்த பரம ரகசியப் பட்டணம் என்னும் சிறந்த புஸ்தகத்தில் கண்டிருப்பதுபோல், கர்த்தர் அர்ச். சூசையப்பருடைய பரிசுத்தத்தனத்தைப்பற்றி அவருக்கு ஏழு வரங்களை அளித்திருக்கின்றார். அவ்வரங்களை அர்ச். சூசையப்பர் தமது தாசர்களுக்குப் பொழிகிறார். அவைகளேதெனில் :—முதலாவது:—கற்பென்னும் புண்ணியத்தை யடையவும் மோகபாவச் சோதனைகளை ஜெயிக்கவும், 2-வது :—பாவத்தைத் தள்ளி தேவநேசத்தை யடையவும், 3-வது :—மாதாவின்பேரில் பூரண பத்திகொள்ளவும், 4-வது :—நல்ல மரணத்தையும், அந்திய நேரத்தில் சாத்தான்மேல் ஜெயத்தை அடையவும், 5-வது :—அர்ச். சூசையப்பருடைய திவ்ய நாமத்தை யுச்சரித்து, இரட்சண்யத்தின் சத்துராதிகளை ஜெயிக்கவும், 6-வது :—சரீர சவுக்கியத்தையும், துன்பத்தில் ஆறுதலையு மடையவும், 7-வது :— புத்திரபாக்கியம் அடையவுமேயாம். சமுசாரிகள் விசேஷமாய் அவரை மன்றாடித் தங்களுக்கு வேண்டிய ஆத்தும சரீர நன்மைகளை யடைந்துய்வார்களாக.

## FR. L. X. FERNANDES' JUBILEE CELEBRATION.

## சென்னையில் நடந்தேறிய சங். L. X. பெர்னாண்டெஸ் சுவாமிகளின் வெள்ளி ஜூபிலி மகோற்சவ கொண்டாட்ட வைபவம்.

சென்னைமா நகரின் கண் வட ஜார்ஜ்டவுன் அர்ச். மோக்ஷ இராக்கினிமாதா கோவிற்பங்கு விசாரணைக் குருவாகிய சங்கைக்குரிய லாரன்ஸ் சவியேர் பெர்னாண்டெஸ் சுவாமிகளின் குருப்பட்டாபிஷேக 25-ம் வருஷம் வெள்ளி ஜூபிலி மகோற்சவமானது, கடந்த பெப்ரவரிமீ 15வ ஞாயிற்றுக்கிழமை இங்குள்ள கத்தோலிக்கருக்குள் இதற்குமுன் என்றுமில்லாத மன உற்சாக அக்களிப்புடன்—அதி உல்லாச சம்பிரமத்துடன் வெகு மனோகரமாய் நடந்தேறியது.

அன்று காலை 7 மணிக்கு அந்த நல்ல மாக்ஷிமைத் தந்தையாகிய சங். L. X. பெர்னாண்டெஸ் சுவாமிகள், "நல்ல ஆயன்" பத்திராதிபராகிய சங். John சுவாமிகளையும், சங். சஞ்சீவி சுவாமிகளையும் டீக்கன், சப் டீக்கனாகக் கொண்டு ஷை கோவிலில் வெகு ஆடம்பரத்துடன் பெரியபாடல் பூசைசெய்து, "தெதேயும்" என்னும் நன்றியறிந்த தேவ தோத்திரம் பாடி திவ்யநற்கருணை ஆசீர்வாதமுங் கொடுத்தார்கள். பூசை முடிந்தவுடன் அக்கோவில் முகப்பின் முற்ற வெளியில் அலங்காரமாய் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் அழகிய ஓர் ஆசனத்தில் ஷை சுவாமிகள் அமர, சூழ்ந்திருந்த அநேக துரைமார், துரைசானிமார், பங்கு விசாரணையைச்சேர்ந்த ஏனைய ஜனங்கள் சுபசோபன மங்களம் பாடி. ஆர்ப்பரிக்க "விகடதூதன்" பத்திராதிபராகிய ஸ்ரீமான் இராஜேந்

திரம் பிள்ளை யவர்கள் வந்தனோபசார வாழ்த்துதல் பத்திரமொன்று வாசித்தார்கள். பிறகு மேற்படி துரைமாரும் துரைசானிமார்களும் மற்றுமுள்ளோர்களும் புடைசூழ, இரண்டு அஸ்வங்கள் பூட்டிய இரதத்தின்மேல் மேற்சொன்ன 3 குருக்களையும் அமர்த்தி ஷை கோவிலைச் சுற்றியுள்ள மாடவீதிகளில் ஊர்வலம் வந்ததும், அவ்வீதிகளில் எல்லா இடங்களிலும் அலங்காரம் செய்யப்பட்ட தோரணங்கள் கொடிகளின் காட்சிகளும், வழியில் ஒவ்வோர் இடங்களிலும் நிறுத்தி நடந்த பாட்டுக்கச்சேரிகளும், வாலண்டியர் பாண்டு வாத்தியத்தின் இனிய கீதமும், இடைக்கிடை பூக்களை வாரி இறைத்து, பன்னீர் தெளித்ததும், ஷை குரு சுவாமிகளுக்கு பூமாலைகளைச் சூட்டிச் செய்த ஆரவாரச் சிறப்புகளும் பார்ப்போர் மனதை ஆனந்த சாகரத்தில் மூழ்கச்செய்தன. பின் மத்தியானம்வரையில் ஏழைகளுக்கு வஸ்திரதானங்களும், பொருளுதவிகளும், அன்னதானமும் அளிக்கப்பட்டன. பலர் சந்திப்பு வரிசைகளுடன் வந்து சுவாமிகளைக் கண்டுகொண்டார்கள்.

### பகிரங்கக் கூட்டம்.

அன்று தினம் முக்கியமாய் நடந்த சம்பவம் என்னவென்றால், சாயுங்காலம் 5 மணியளவில் சென்னை விக்றோரியா பப்ளிக் மண்டபத்தில் நிறைவேறிய மகா பெரிய ஓர் கூட்டமேயாகும். அன்று மயிலை ஆண்டவரவர்கள் சென்னையில் இல்லாதபடியால் ஷை மேற்றிராசனத்து வைக்கர் ஜெனரலாகிய சங். A. M. டெக்செய்ரா சுவாமிகள் ஷை கூட்டத்துக்கு அக்கிராசனம் வகித்தார்கள். முதன்முதல், ஷை சுவாமிகளின் உன்னத அன்பையும், மரியாதையையும், கௌரவத்தையும் காண்பிக்கும்பொருட்டு இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும், பர்மா, Straits Settlement சிங்கப்பூர், கோலாலம்பூர், சிலோன் முதலிய இடங்களிலிருந்து குதூகலத்துக்குரிய நூற்றுக்கணக்கான தந்திகள் வந்திருந்ததைத் தெரிவித்தபின், சங். டெக்செய்ரா சுவாமிகள் ஆசனத்தை விட்டெழுந்து, கனம் மேற்றிராணியாண்டவரவர்கள் ஷை கூட்டத்துக்கு வரக்கூடாமற்போன அசந்தர்ப்பத்தைத் தெரிவித்து, சங். பெர்னாண்டெஸ் சுவாமியார் 25-வருஷகாலமாய் அந்த மேற்றிராசனத்தில் செய்துவந்த அரிய பெரிய வேலைகளுக்காகவும், அதி உன்னத உழைப்புக்காகவும், மேற்றிராணியாண்டவரவர்களின் வந்தனோபசாரத்தை தமது மூலியமாய் அனுப்பியதாகச் சொன்னார்கள். அதன்பின் தமக்கு ஷை சுவாமிகள் 27-வருடங்களாக நன்றாய்த் தெரியுமென்றும், அவருடைய பால்யத்திலிருந்து இந்த வயோதிப வயதுவரையும் உள்ள அவரது அரும் பிரயாசை தமது ஞாபகத்தில் தெளிவாய்ப் பதிந்திருக்கின்றனவென்றும், 28 வருடங்களுக்குமுன் தாம் இந்தியாவுக்கு வந்து குருப்பட்டத்துக்கு வாசித்துக்கொண்டிருக்கும்போது, பெர்னாண்டெஸ் சுவாமிகள் தமக்குத் தந்தருளிய புத்திமதி யோசனைகளைத் தாம் ஒருபோதும் மறக்கத்தக்கதல்லவென்றும், அந்த நல்ல குரு ஐரோப்பாவுக்குச் செல்லத் துணிந்து அங்கு சென்று, ஒவ்வோர் இடங்களிலும் தர்ம விஷமாய் அருமையான பல பிரசங்கங்கள் செய்ததையும், இந்திய ஆண் பெண் சிறுவர்களுக்காக கஷ்டத்துடன் நிதிசேகரஞ்செய்ததையும். ஐரோப்பாவிலிருந்து பெருந் திரவியங்களைக் கொணர்ந்ததையும், அதைக்கொண்டு தஞ்சாவூரில் அநாத பிள்ளைகளுக்கென்று ஒரு மடங் கட்டுவித்து, அது இப்போது சலேசியன் குருக்கள் ஆதரணையில் வெகு பிரயோஜனகரமாய் நடந்தேறி வருவதையும், ஏழைக் குமரிகளுக்கென்று மற்றொரு நிதியைச் சேகரித்து, கல்யாண காலங்களில் அவர்களுக்குதவி செய்துவருவதையும், இன்னும் அவர் செய்த எண்ணற்ற காரியங்களையும் வெகு தெளிவாய் எடுத்துப் பேசி, மயிலை மேற்றிராசனம் இது விஷயமாய் ஷை சுவாமிகளுக்கு வெகுவாய் நன்றிபாராட்டவேண்டுமென்பதைத் தமது மேற்றிராணியாண்டவருக்குப் பதிலாகத் தாம் குறிப்பிட்டு, உள்ளன்போடு வந்தனஞ்செலுத்துவதாய் குதூகலத்துடன் சொல்லி முடித்தார்கள். பிறகு ஷை குரு சுவாமிகளுக்கு அநேக வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. ஒவ்வொரு வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டபின் அவ்வவர்களால் சுவாமிகளுக்கு வெகுமதியாக பூசை பாத்திரங்கள், கடியாரம், பணப்பைகள் முதலியன அளிக்கப்பட்டன. முதல் வந்தன வாழ்த்துப் பத்திரம் ஷை சுவாமிகளின் சிநேகிதர்களுக்காகவும், அவரது க்ஷேமத்தைக் கோரும் தென்னிந்தியா, சிலோன், பர்மாவிலுள்ள கத்தோலிக்குப் பிரசைகளுக்காகவும் காலஞ்சென்ற ஆனரபில் ஸ்ரீமான் பிரகாச முதலியார் குமாரர் ஸ்ரீமான் தனபால் முதலியாரவர்கள் 'வாசித்தார்கள். அதில் நமது நல்ல குருவானவரின் உன்னத குணத்தையும், சாமர்த்தியத்தையும், ஐரோப்பாவுக்குச்சென்ற துணிவையும், 13-ம் சிங்கராய

பாப்பாண்டவரைக்கண்ட முதல் இந்தியகுருவும் இவரே என்ற மகிமையையும், இங்கிலாந்தின் உயர்ந்த கத்தோலிக்குப் பிரபுவாகிய காலஞ் சென்ற டியூக் ஆப் னார்பக் பிரபுவிடத்திலும், காலஞ்சென்ற பேர்போன ஆஸ்திரியா அங்கேரியா கத்தோலிக்கு சக்கரவர்த்தியாகிய பிரான்சீஸ் ஜோசப் என்பவரோடும், போர்த்துக்கல், பெல்ஜியதேசத்து ராணிகளோடும், மற்ற ஐரோப்பிய பிரபுக்கள் பலரோடும் இவர் விருந்தாளியாய் இருந்த கௌரவத்தையும் சுட்டிக்காட்டி, வெகு தெளிவாய் எழுதியிருந்தது. பின் முறையே மோட்ச இராக்கினிமாதா கோவில் விசாரணைக் கிறீஸ்துவர்களாலும், சிலோன் பரத சங்கத்துப் பிரதிநிதிகளாலும், பரத சோஷியல் கிளப்பின் பிரதிநிதிகளாலும், வீரபாண்டியன்பட்டணம், தூத்துக்குடியிலுள்ள கிறீஸ்துவர்களின் பிரதிநிதிகளாலும் ஷை சுவாமிகளின் ஜனன ஊராகிய மணப்பாட்டு பதுரவாது மிஷன் கிறீஸ்துவர்களின் பிரதிநிதிகளாலும், சென்னையிலுள்ள ஏழைப் பிள்ளைகள் கல்வி அபிவிர்த்தி சங்கத்து மெம்பர்களாலும், இன்னும் பலராலும் அநேக வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. கூட்டங் கூடிய மண்டபத்தின் மேடையில் ஒவ்வொரு வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டபின் இடைக்கிடை வாலண்டியர் பாண்டு வாத்திய கீதங்கள் வாசிக்கப்பட்டன.

இதன்பின், சங். சோமா சுவாமி அவர்களும், ஆனரபில் அருமைநாதப் பிள்ளை அவர்களும், M. P. குழந்தைசாமிப் பிள்ளை அவர்களும், ஸ்ரீமான் V. சக்கரைச் செட்டியார் அவர்களும் ஸ்ரீமான் D. குழந்தை அவர்களும் ஷை சுவாமிகளை வாழ்த்தித் தமிழிலும், இங்கிலீஷிலும் அருமையான உபந்நியாசங்கள் செய்தார்கள். அன்றியும் மரியதெரேஸ் மகிமை அம்மாள் என்னும் ஒரு கத்தோலிக்கு இந்திய மாதராள், அவ்வரங்கத்தில் மிக்க விநயத்துடன் நின்று இந்திய கத்தோலிக்குப் பெண்கள் இடமாக சங். பெர்னாண்டெஸ் சுவாமிகளை வாழ்த்திப் பேசியபின், பெண் கல்வியைப்பற்றி ஒரு இனிய பாஷிதத்தைப் பொழிந்தார்கள்.

கடைசியாய் வரவேற்புக் கமிட்டியாரின் வந்தனத்தை ஸ்ரீமான் D. குழந்தை அவர்கள் சொன்னார்கள். இப்பெருங் கூட்டத்தில் கத்தோலிக்கர் மாத்திரமல்ல, இந்து கனவான்களும் ப்ரோடெஸ்டாண்டு பிரபுக்களும் அநேகர் சமுகந் தந்தார்கள்.

முடிவில் சங். L. X. பெர்னாண்டெஸ் சுவாமிகள் இங்கிலீஷிலும் தமிழிலும், இந்த 25 வருஷ காலமாய் தம்மைக் காப்பாற்றிய கர்த்தருக்கு தோத்திரம் செய்தபின், தமக்குக் கிடைத்த இந்த வந்தனோபசாரங்களுக்கும், வாழ்த்துதலுக்கும் உரியவர்கள் கீழ்த்திசை கத்தோலிக்கு வேதத்தை பிரசித்தப்படுத்த முன்னோடிகளாய் வந்த போர்த்துக்கீஸ் ஜாதியார்களேயென்றும், அச்சாதியாரின் மாட்சிமையைப்பற்றி உயர்வாய்பேசித் தாமும் தம் இனத்தவரும் போர்த்துக்கேயரின் பட்டப்பெயரை வகித்திருப்பதின் காரணத்தையும், தாம் குருப்பட்டம்பெறத் துணிந்தபோது தமக்கு நேரிட்ட பல இடையூறுகளையும், தமது ஜெனன ஊராகிய மணப்பாட்டையும், இப்போது அது பேர்போன மகிமைபொருந்திய ஊராயிருப்பதையும், வெகு சாதுரியமாய்ப் பேசியபின், பாப்பானவர் சமீபத்தில் இந்திய குருக்களின் விஷயமாய் அனுப்பிய நிருபத்தின் நகலொன்றை எடுத்து வாசித்து, அந்த நிருபத்தின்படி இந்திய குருமாருக்கு அதிக கல்வி பயிற்றுவித்து, அவர்கள் அதிக பெரிய உத்தரவாதமான பதவிகளை வகித்து நிர்வாகஞ்செய்வதற்கு யோக்கியமாய் அவர்களைப் பழக்கவேண்டுமென்று சொல்லி, இந்திய குருக்களை மேன்மைப்படுத்த எண்ணங்கொண்டதற்காக அந்தப் பரிசுத்த தந்தைக்கு பகிரங்க வந்தனம் செய்து, இந்தியாவுக்கு இந்திய கத்தோலிக்கு மேற்றிராசனம் அவசியம் என்பதை இயம்பி, சிலர் சொல்வதாய்த் தாம் கேள்விப்படுகிறபடி தாம் ஒரு பிஷப்பாகவேண்டுமென்ற எண்ணம் தமக் கில்லவேயில்லையென்றும், சுதேச மேற்றிராசனம் உண்டாயிருக்கக் காண்பதே தமது விருப்பம் என்றும் சொல்லி, ஸ்ரீமதி மரிய தெரெசம்மாள் பெண்ணினத்துக்காகத் தம்மைப் புகழ்ந்து பேசி யளித்த வந்தனத்தை பெரிதும் பாராட்டி, அந்தம்மாள் பெண் கல்வியை அபிவிருத்தி செய்யும்படி கேட்டுக் கொண்டதற்கு இசைய, தாம் இந்த மீ முதற் கொண்டு பெண்பிள்ளை மாணாக்கிகளுக்கு ரூ. 10 மாதாந்தர உபகாரச் சம்பளம் (ஸ்காலர்ஷிப்) ஏற்படுத்துவதாகவும், தொழிலாளர்களுக்கு இராப் பள்ளிக்கூடம் ஒன்று ஆரம்பிப்பதாகவும் வாக்களித்தார்கள்.

கடைசியாய்க் காலஞ்சென்ற டியூக் ஆப் நார்போக் பிரபுவைப்பற்றி மிகவும் பெருமைப்படுத்திப் பேசி முடிக்க, கனம் டெக்ஸ்ரா சுவாமிகள், அந்நாள் உற்சவம் யாதொரு ஆடங்கமில்

லாமல் ஆனந்த சம்பிரமத்தோடு சம்பூரணமாய் நிறைவேறியதற்காக வரவேற்புக் கமிட்டியாருக்கு வந்தனம் கூறினார்கள். கடவுள் நம் அரசரைக் காப்பாராக என்னும் கீதத்தை ஆயிரமாய்க் கூடிய ஜனங்கள் ஆர்ப்பரிப்போடு பாடவே கூட்டம் கலைந்தது.

கண்டது விண்டோன்.

## EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

### 3-ம் அதிகாரம்; வசனம்—1–14.

**வசனம்.—1.** "திபேரியூ என்னும் செசாருடைய இராச்சியபாரத்தின் பதினைந்தாம் வருஷத்திலே, போஞ்சுபிலாத்து என்பவன் யூதேயா தேசத்துக்கு அதிபதியாகவும் எரோது என்பவன் கலிலேயா நாட்டின் சதுர்த்த பாகபதியாகவும், அவன் சகோதரனாகிய பிலிப்பு இத்துரையா நாட்டுக்கும், திராக்கோனிதி நாட்டுக்கும் சதுர்த்தபாகபதியாகவும், லிசினியாஸ் என்பவன் அபிலினே நாட்டுக்குச் சதுர்த்தபாகபதியாகவும்,

**2-ம் வசனம்.**—அன்னாஸ், கைப்பாஸ் என்பவர்கள் பிரதான ஆசாரியர்களாகவும் இருந்தகாலத்தில், வனாந்தரத்திலே சக்கரியாஸ் குமாரனை அருளப்பருக்கு ஆண்டவருடைய வாக்கியம் உண்டாயிற்று."

சேசுநாதர் தமது அந்தரங்க சீவியத்தைவிட்டு ஜனங்களுக்கு உபதேசிக்க வெளியேறுகிறதற்கு முன்னர், ஸ்நாபக அருளப்பரைத் தமது முன்னோடியாக அனுப்பி, அவர் மூலமாய் அச்சனங்களை முஸ்திப்புச்செய்ய சித்தமானார். ஆகவே சேசுநாதரின் பகிரங்க சீவியத்தின் விசேஷங்களைக் கூறுவதற்குமுன் அவருடைய முன்னோடியின் வரலாற்றை லூக்காஸ் அறிவிக்கிறார். ஸ்நாபக அருளப்பர் எக்காலத்தில், யாருடைய ஆளுகையில், எவ்விடத்தில், முதன்முதல் போதித்தார் என்று வெகு துலக்கமாய் லூக்காஸ் எழுதியிருப்பது, அவருடைய சுவிசேஷ புஸ்தகம் நுணுக்கமான சரித்திராசாச்சியுடன் வரையப்பட்டதென்று நமக்கு எண்பிக்கின்றது.

அகுஸ்துஸ் சக்கரவர்த்திக்குப் பின்னர் திபேரியுஸ் சேசார் உரோமை இராச்சியங்களைக் கைக்கொண்டான். பாலரைச் சங்கரித்த பெரிய எரோது ராஜன் மரித்த பின், அவன் ஆண்டுவந்த பலஸ்தீனாவை அகுஸ்துஸ் சக்கரவர்த்தி பல பாகங்களாகப் பிரித்து, அவனுடைய புத்திரர்களாகிய அர்க்கலாசுக்கும், எரோது அந்திபாசுக்கும், பிலிப்புக்கும் கொடுத்தான். ஆகவே அர்க்கலாஸ் என்பவன் யுதேயா, சமாரியா, இதுமேயா நாடுகளுக்கு அதிபதியாகவும், எரோது அந்திபாஸ், கலிலேயா பெரேயாவுக்கு அதிபதியாகவும், பிலிப்பு இத்துரையா, திராக்கோனிதி நாடுகளுக்கு அதிபதியாகவும் ஏற்படுத்தப்பட்டார்கள்.

ஆனால் சீரியா தேசத்துக்கு மேற்கேயுள்ள அபிலினே நாட்டை சின்ன லிசினியாஸ் என்பவன் ஆண்டுவந்தான். இவன் எரோதனுடைய குமாரன் அல்ல. இவனைப்பற்றி ஜொசேப்புஸ் சரித்திராசிரியன் பன்முறை எழுதியிருக்கிறான்.

ஆனால் அர்க்கலாஸ் என்புவன் 10-வருஷம்தான் யூதேயாவை ஆண்டுவந்தான். அவன் கொடுங்கோலனாய் பிரசைகளை இம்சித்து செய்த அட்டூழியங்களுக்காக இராச்சியபரிபாலனத்தினின்று நீக்கப்பட்டு, பரதேசம் துரத்தப்பட்டான். அவனுக்குப்பின்னர் உரோமை அதிகாரிகளே யூதேயா நாட்டுக்கு அதிபதிகளாய் இருந்தார்கள். திபேரியுஸ் இராச்சியபாரம் செய்த 15-ம் வருஷத்தில் போஞ்சுபிலாத்து என்பவன் யூதேயா நாட்டுக்கு 5-வது அதிபதியாக இருந்தான்.

சதுர்த்தபாகபதி என்பது ஒரு தேசத்தில் நாலிலொரு பங்குக்கு அதிபதி என்றர்த்தமாகும்.

லூக்காஸ் தேச அதிகாரிகளின் பேர்களைக் குறித்தபின், வேத அதிகாரிகளையும் குறிப்பிடுகிறார்.

அன்னாஸ் என்பவன் கி. பி. 6-ம் வருஷத்திலிருந்து 15-ம் வருஷம்வரையிலும், கைப்பாஸ் என்பவன் கி. பி. 18-ம் வருஷத்திலிருந்து 36-ம் வருஷம்வரையிலும் யூதர்களுடைய பிரதான ஆசாரியர்களாக இருந்தார்கள். இருவரும் ஒரே காலத்தில் பிரதான ஆசாரியர்களாக இல்லாவிடினும், அன்னாஸ் என்பவனுக்கு இருந்த பெரும் பிரக்கியாதியினிமித்தம், கவரதைக்காக அவனுடைய பெயர் கைப்பாஸின் பெயருக்குமுன்னர் வைக்கப்பட்டது. மேலும் அன்னாஸ் என்பவன் கைப்பாஸின் காலத்தில் அநேகமாய்க் காரியங்களை நடத்தினான் என்றும் சொல்லலாம். இந்தப் பிரதான ஆசாரியர்களை நியமிப்பதும், அவர்களை நீக்கிவிடுவதும் உரோமை அதிபதிகளைச்சார்ந்த விஷயமாயிருந்தது. ஆகவே யூதருடைய தேச ஆளுகையும், அவர்களுடைய வேத காரியங்களும், அந்நியருடைய அதிகாரத்துக்குட்பட்டிருந்ததினால், யூதருடைய அரசு அற்றுபோய் விட்டதென்றும் இதுதான் தீர்க்கதரிசிகள் கூறியுள்ளபிரகாரம், மெஸ்ஸியாஸ் அரசன் தோன்றும் காலம் என்றும் தெற்றென விளங்குகின்றது. மேற் குறிப்பிட்ட காலத்தில் "வனாந்தரத்தில் சக்கரியாஸ் குமாரனான அருளப்பருக்கு ஆண்டவருடைய வாக்கியம் உண்டாயிற்று". அருளப்பர் தீர்க்கதரிசி என்று விளங்கும்பொருட்டு சர்வேசுரன் தீர்க்கதரிசிகளை முற்காலத்தில் அனுப்பினபோது, "ஆண்டவருடைய வாக்கியம் உண்டாயிற்று" என்று அவர்களைப்பற்றி வேதாகமத்தில் எழுதியிருப்பதுபோல், இங்கும் அதேபிரகாரம் அருளப்பரைப் பற்றியும் சொல்லப்படுகின்றது.

அருளப்பர் தனது பாலப்பருவத்திலிருந்து, இஸ்ராயேலருக்குத் தன்னைக் காண்பிக்கும்வரையில் வனாந்தரத்திலேயே சஞ்சரித்தார்.

"ஆண்டவருடைய வாக்கியம்" என்றால் ஆண்டவர் அவருக்குக் கொடுத்த கட்டளை என்றர்த்தமாகும்.

சர்வேசுரன் கொடுத்த கட்டளையினிமித்தம், அருளப்பர் தன்னுடைய வனவாசத்தைவிட்டு ஜனங்களுக்கு உபதேசம் பண்ண வெளியேறுகிறார். அவர் யோர்தான் நதிக்கடுத்த நாடெங்கும் போதிக்கிறார். இந்நாடு நீர்வளம் நிலவளம் மிகுந்து பயிர்வளம் தழைத்த செழிப்பான பூமியல்ல; ஆடுமாடுகள் மேய்வதற்கு வசதியாயுள்ள கரடு முரடான நிர்மானுஷிய காடு. பூர்வீகத்தில் இஸ்ராயேல் ஜனங்கள் வனாந்தரத்திலும்யோர்தான் நதியோரத்திலும் தயாரிக்கப்பட்டு, மெஸ்ஸியாவின் தேவ இராச்சியத்துக்கு முற்குறிப்பாயிருந்த வாக்குத்தத்த பூமியை சுதந்தரித்துக்கொண்டாற்போல், இப்போதும், கிறீஸ்துநாதரின் ஞான இராச்சியத்தில் உட்படுவதற்குமுன் ஜனங்கள் வனாந்தரத்திலும், யோர்தான் நதிக்கருகாமையிலும் அருளப்பரால் முஸ்திப்புச் செய்யப்படுவது மெத்த பொருத்தமாயிருக்கின்றது.

அவர் தவத்தின் ஞானஸ்நானத்தைப் பிரசங்கிக்கிறார். தமது பிரசங்கத்தால் ஜனங்கள் தங்கள் பாவங்களுக்காக மெய்யான மனஸ்தாபப்பட்டு, அம்மனஸ்தாபத்தின் அடையாளமாக அருளப்பரின் கையால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறார்கள். யோர்தான் நதியின் ஜலத்தில் முழுகி ஸ்நானம் செய்யும் சடங்கு, அவர்கள் தங்கள் ஆத்துமத்திலுள்ள பாவ மாசுகளினின்று நீங்கி சுத்தமாக்கப்படுவதற்கும், தவத்தைத் தழுவிக்கொண்டதற்கும் சிறந்த அடையாளமாக விளங்குகின்றது.

அருளப்பர் கிறீஸ்துநாதருடைய முன்னோடியாய் தோன்றி, ஜனங்களுக்குத் தவத்தைப் பிரசங்கித்து, அவர்களுடைய இருதயங்களை ஆண்டவருக்கு முஸ்திப்புச் செய்வார் என்று இசையாஸ் தீர்க்கதரிசி கூறியதை லூக்காஸ் இங்கு வசனிக்கிறார். அதேதெனில் 3–6-ம் வசனம்.—"வனாந்தரத்திலே சப்திக்கிறவனுடைய குரலொலி (இதோ)! ஆண்டவருடைய வழியை முஸ்திப்புச் செய்யுங்கள், அவருடைய பாதைகளைச் செவ்வையாக்குங்கள். பள்ளத்தாக்கெல்லாம் தூர்க்கப்படும், மலை குன்றெல்லாம் தாழ்த்தப்படும், கோணலானவைகள் நேராகவும், கரடானவைகள் சமவழிகளாகவுமிருக்கும். எந்த மனிதனும் சர்வேசுரனுடைய இரட்சண்யத்தைக் காண்பான் என்பதாம்". அருளப்பர் கானகத்திலே வளர்ந்த உத்தம தப

சியானதினாலும், தன் வாக்கின் வல்லமையால் தபத்தைச் செய்யும்படியாக ஜனங்களைத் தூண்டி கிறீஸ்துநாதரிடம் கொண்டுவந்து சேர்த்ததினாலும் வனாந்தரத்திலே சப்திக்கிறவனுடைய குரலொலி என்னப்படுகிறார். மகாராஜன் ஒருவன் ஓர் பட்டணத்துக்குள் பிரவேசிக்கிறதற்குமுன், ஊர் ஜனங்கள் தங்கள் பட்டணத்தின் பாதைகளை மேடுபள்ளமில்லாமல் சமப்படுத்தி செப்பனிடுவார்கள்.

வழிகளைச் சுத்தமாக்கி தோரணங்களையும் கொடிகளையும் கட்டி நறுமணம் வீசும் புஷ்பங்களை எங்கும் தெளித்து மெத்த வைபவ சிறப்புடன அரசன் வருகைக்குஆவலாய்க் காத்திருப்பார்கள். அப்படியே ராஜாதிராஜனாகிய கிறீஸ்துநாதர் வருகிறகாலம் நெருங்கிவிட்டதினால், அவருடைய முன்னோடி ஜனங்களை நோக்கி அவருக்கு நல்வரவு கூறி ஞான விதமாய் அவரை ஏற்றுக்கொள்ள முஸ்திப்பு செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறார்.

மலைபோல் உயர்ந்திருக்கும் பெருமையையும் அகங்காரத்தையும, பள்ளதாக்குக்கு ஒப்பிடப்பட்ட கோழைத்தனத்தையும் அதைரியத்தையும், கோணல கரடு என்னப்படும் துர்ச் சுபாவத்தின் தாறுமாறு ஒழுங்கீனங்களையும் பாவ அக்கிரமங்களையும ஒழித்துவிட்டு, தாழ்ச்சி, உதாரகுணம், நமபிக்கை மனத்தூய்மை, மதுரம் சாந்தம் என்னும் புண்ணியங்களால் ஆத்துமத்தை அலங்கரித்து திவ்ய கர்த்தரை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும், இவ்வாறு ஆத்துமத்தை முஸ்திப்புச் செய்தால், தேவ இரட்சகரைச் சரீரக்கண்களாலும், ஞான திருஷ்டியாலும் காணலாகும் என்றும், இவைமுதலான அநேக வாக்கியங்களைச் சொல்லி அருளப்பர் போதித்தார்.

இப்படியே யுதேயா பிரிவிலும்,யோர்தான் நதியின சுற்றுக் கிராமங்களிலுமிருந்து ஜனங்கள் திரள்திரளாய் அவரிடம் வர,அவர்களுக்குள்ளே அநேக பரிசேயர், சதுசேயர்களும் நற்கருத்தில்லாமல் ஒன்றில் அருளபபர் ஏற்படுத்திய ஸ்தானத்தினால ஜனங்களுக்குள்ளே புகழ்ச்சியை அடையவேணுமெனறும் அலலது ஒன்றில், அவருடைய நடத்தையையும் படிப்பினையையும் பழிக்கவேணுமென்றும் வந்தவிடத்திலே, அருளப்பர் அவர்களுடைய துஷ்ட கருத்தையறிந்து 7–9-ம் வசனம். —“ விரியன் பாம்புக்குட்டிகளே! வரப்போகிற கோபாக்கினைக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்? ஆகையால தவத்துக்கு ஏற்ற பலனைக் கொடுங்கள்! எங்களுக்குப் பிதாவாக அபிரகாம் இருக்கிறாரென்று சொல்லத் தொடங்காதேயுங்கள். ஏனென்றால், சர்வேசுரன் இந்தக் கல்லுகளினின்று அபிரகாமுக்குப் புத்திரர்களைப் பிறப்பிக்க வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே, மரங்களின் வேரருகில் கோடாரி போடப்பட்டிருக்கின்றது. ஆகையால நற்கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும் ” என்றார்.

விரியன் பாம்பு கொடும் விஷமுள்ள அருவருக்கத்தக்க ஈன ஜெந்து. இதின் விஷம் மகாகனமான பாவத்தை குறிக்கும். பாவங்களின் விஷத்தை யூத ஜனங்கள் தங்கள் பெற்றோர்களிடத்தினின்று கைப்பற்றி, அவ்விஷத்தை நீக்கி தங்களைத் திருத்திக்கொள்ளாமலிருந்ததினால் அவர்களை விரியன் பாம்புக்குட்டிகள் என்று அருளப்பர் கடிந்துகொள்ளுகிறார்.

வரப்போகிற கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்?............நீங்கள் அபிரகாம் மக்களாயிருப்பதினால் மோட்ச இராச்சியத்துக்குச் சுதந்தரமுள்ளவர்களென்று நினைக்கிறீர்கள். ஆனால் தேவ கோபம் உங்கள்மேல் வரப்போகிறதென்று அறியீர்களோ? அக்கோபத்தினின்று தப்பித்துக்கொள்ள உங்களுக்குப் படிப்பித்ததார்? உங்கள் கள்ள நடத்தையினால் தேவ முனிவை விலக்க நினைக்கிறீர்களோ? உங்கள் துஷ்ட சீவியத்தை விடாமல் தேவ தயவை அடையக்கூடுமோ?உங்கள் பாவங்களுக்காகப் பச்சாதாபப்பட்டு நற்கிரியைகளைச் செய்தாலொழிய தேவகோபம் உங்களைவிட்டு நீங்காது. நீங்கள் அபிரகாம் பிள்ளைகளென்றும், அதுவே உங்களை ஈடேற்ற போதுமென்றும், பரிசுத்த பிரசையென்றும், தெரிந்துகொள்ளப்பட்ட வம்சமென்றும் சொல்லிகொண்டு மோசம்

போகவேண்டாம். ஏனென்றால் சர்வேசுரன் இந்தக் கல்லுகளினின்று அபிரகாமுக்குப் பிள்ளைகளாக்க வல்லவராயிருக்கிறார். மண்ணை எடுத்து ஆதி மனுஷனை உண்டுபண்ணினவர் கல்லினின்றும் பிள்ளைகளை உண்டுபண்ணக்கூடுமல்லோ? கல்லைப்போல் கடின மனமுள்ள அக்கியானிகளை, விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் சிறந்த ஞானிகளாக்கியும், அவிசுவாசிகளை விசுவாசிகளாக்கியும், அபிரகாம் பிள்ளைகள் கணக்கிற் சேர்க்க சர்வேசுரனால் கூடாதோ? மரத்தின் வேரை கோடரியால் வெட்டிவிட்டால் எப்படி மரம் சாய்ந்து திரும்பவும் துளிர்க்கக்கூடாவண்ணம் பட்டுப்போகுமோ, அப்படியே நீங்களும் உங்கள் முழு இருதயத்தோடு மனந்திரும்பி, புண்ணியகனிகளைக் கொடாமல்போனால் தேவகோபாக்கினை உங்களை சுட்டெரித்து நாசமாக்கிவிடும். முற்காலத்தில் உங்கள் பிதாக்கள் செய்த பாவங்களுக்காக, சர்வேசுரன் அவர்களைப் பரதேசம் அனுப்பி கடினமாய்த் தண்டித்தார். ஆனால் அவர்கள்பேரில் தயவுகூர்ந்து திரும்பவும் அவர்களை அவர்களுடைய சொந்த ராச்சியத்தில் சேர்த்தார். இப்போதோ நீங்கள் தவத்தை அநுசரித்து தர்மக் கிரியைகளைச் செய்யாவிட்டால், கனிகொடாத மரம் வெட்டுண்டு நெருப்பில் வீசப்படுவது போல், நரக நெருப்பில் அவியாத கட்டையாய் வேக, தள்ளப்படுவீர்கள் என்று அருளப்பர் போதித்தார்.

**10–14-ம் வசனம்.**—அப்போது ஜனங்கள் இப்படிப்பட்ட வாக்கியங்களுக்குப் பயந்து "நாங்கள் ஏதுசெய்ய வேண்டியதென்று கேட்டவிடத்திலே இரு சட்டையுள்ளவன் ஒன்றுமில்லாதவரியோர்களுக்குக் கொடுக்கக்கடவான்" என்று தயாபர பிறசிநேகக் கிரியைகளினால் முன் சர்வேசுரனுக்குச் செய்த துஷ்டாட்டங்களை யுத்தரிக்கப் படிப்பித்தார். பின்பு இராச கடமையும் தீர்வைக் காசும் வாங்கும் ஆயக்காரர் ஞானஸ்நானம் பெற வந்து, குருவே, நாங்கள் செய்யவேண்டியதேதென்று கேட்க உங்களுக்கு இராசாக்களால் நியமிக்கப்பட்டதையல்லாதே யதிகமாய் வாங்கவும், கேட்கவும், பறிக்கவும் கடவீர்களல்லவென்று பிரசங்கிப்பார்.

அதின்பின் படைச்சேவகர் வந்து நாங்கள் ஏதுசெய்யக்கடவோம் என்று விசாரிக்கும்போது, நீங்கள் ஒருவனையும் கொல்லாமலும், காயப்படுத்தாமலும், நிந்தியாமலும், அவதூறு சொல்லாமலும், உங்களுக்குக் கிடைக்கிற சம்பளத்தில் திருப்தியடைந்திருங்கள் என்று வசனிப்பார்.

இப்படியே ஸ்நாபக அருளப்பர், பெரியோர்களுடைய முகத்தைப் பாராமலும், சிறியோர்களுடைய கொஞ்சத்தனத்தை நிந்தியாமலும், துக்கித்தவர்களுக்கு ஆறுதல் சொல்லி, பாவிகளை அன்பாய்க் கைக்கொண்டு, அகந்தையானவர்களைக் கடிந்து முன்காணாத நெறியைச் சமஸ்தருக்கும் படிப்பித்து கிறீஸ்துநாதருடைய வழியை நேர்ப்படுத்திவந்தார்.

(தொடரும்.)

*S. M.*

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

### ஓர் உபந்நியாசம்.

சங். பத்திராதிபரே,

சென்றமீ 15-ம் தேதி, சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில், சங். எல். எக்ஸ். பெர்னாண்டெஸ் சுவாமிகளின் வெள்ளி ஜுபிலி மகோற்சவக் கூட்டத்தில், ஸ்ரீமதி மரியதெரேஸ் மகிமையென்னும் கத்தோலிக்கு இந்திய மாதராள் ஒரு சுருக்கமான—ஆனால், மிக இனிமையும் பொருத்தமுமான உபந்நியாசம் செய்தார்கள். அவ்வாறு நமது 'மாதர்கள் பொதுக்கூட்டங்களில் தைரியத்துடன் முன்வந்து பேசத் துணிந்திருப்பது, நமது கத்தோலிக்கு இந்தியர் குடும்பத்துக்கு நல்ல காலம் உதயமாயிற்றென்றே சொல்லலாம். இவ்விஷயத்தில் நமது இதர ஸ்திரீரத்தினங்களுக்குப் படிப்பினையும் தூண்டுதலுமாய் உதவுமாறு, ஷை ஸ்ரீமதி மரியதெரேஸம்மாளின் உபந்நியாசத்தை நம் பத்திரிகையிற் பிரசுரிக்கத் தயைபுரிவீரெனக் கோருகிறேன். அவ்வுபந்நியாசம் பின்வருமாறு:—

"மகாகனம்பொருந்திய, அக்கிராசனாதிபதி லைக்கர் ஜெனரலவர்களே! சங். சுவாமிமார்களே! மற்றும் கனந்தங்கிய ஸ்திரீ புமான்களே!

"நாம் இங்கே கூடியிருப்பது நமது ஞானத் தந்தையாகிய சங். பெர்னாண்டெஸ் சுவாமியாரவர்களின் வெள்ளி ஜூபிலியைக் கொண்டாடும்பொருட்டன்றோ? ஆகையால் இந்தச் சமயத்தில் நாமெல்லோரும் அவருடைய அநேக நற்குணங்களைப்பற்றி அவரைப் புகழ்ந்துபேசி, வாழ்த்திப் போற்றி, அவருக்குப் பல்லாண்டு கூறுவது கிரமமாகும். ஆனால் எனக்குமுன் பேசினவர்களிடமாய் அவர் செய்த அநேக நன்மைகளை நீங்கள் கேட்டீர்கள். நான் அவைகளை மீண்டும் எடுத்துச்சொல்வேனானால், அது மிகையாய்விடும்.

"ஆகிலும், நம்மிந்திய பெண்மக்களனைவரும் அவரைப்பற்றி அறியுமாறு என்னைச் சொல்லும்படி ஏவினார்கள். நான் இத்தகைய பெரிய சங்கங்களிற் பேசி வழக்கமில்லாவிடினும், தற்சமயம் பெரியோர்கள் தூண்டுதலால் பேசவேண்டிய அவசியம் நேரிட்டது. நான் பேசுவதில் ஏதாவது பிழையிருந்தால் மன்னிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அவர் நம்முடைய இந்திய சுவாமியாராயிருப்பதினாலும், நமது தேச ஆச்சாரம் நன்றாய் அறிந்தவராயிருப்பதினாலும், வெகு நயமாக அநேக புற மதத்தினர்களைக் கத்தோலிக்கு வேதத்தில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். ஒரு மனிதன் தன்னைத் தாழ்த்தி பிறரிடத்தில் ஒரு பொருளையாவது வேறு மற்றெந்த காரியத்தையாவது கேட்க தன் மனங்குன்றி தானடைய வேண்டியதைக் கேட்க சங்கோசங்கொண்டு பின்னிடைவான். சங். இப் பெர்னாண்டெஸ் சுவாமியாரவர்களோ, தன் சுயநலத்துக்காக அல்ல, பிறனுக்காக—அதிலும் ஏழைகளுக்காக பல சபைகள் ஏற்படுத்தி நமக்கு நல்லறிவு புகட்ட தன்னை முற்றிலும் மறந்து தன்னைத் தாழ்த்தி பல தனவந்தரிடமும் சென்று பொருள் இரந்து ஏழைகளுக்கு உதவிபுரிந்துமிருக்கிறார். "திரும்ப உனக்குச்செய்யும் வகையிலார்க்கு விருந்திடல் மேலாம்" என்னும் முதுமொழிக்கொப்ப நமது சங். பெர்னாண்டெஸ் சுவாமியாரவர்களும் தமக்குக் கைம்மாறுகவாமல் உதவி செய்ததுமன்றி, அவரின் மக்களான நமக்கு வேத விஷயத்தில் ஓர் உன்னத கேடயம்போலிருந்து, மேலான பிரசங்கங்களினாலும் மிருதுவான பாஷையாலும் நம்மை அவர் சத்திய மார்க்கத்தில் ஸ்திரப்படுத்தியும்வந்தார்.

"இன்னுமவர் தமது தேக பிரயாசையையு மறந்து, இரங்கூன், சிங்கப்பூர் முதலிய பல தூர தேசங்களுக்குச்சென்று, பல சபைகளை யேற்படுத்தி, அவற்றால் அநேக நன்மை செய்தும், ஜனங்களைத் தன் பாரிசமாகத் திருப்பியும் நல்வழிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதன்றி நமக்கு நன்மாதிரியாக அரிய பெரிய புஸ்தகங்களையும் இயற்றினார். அவர் எண்ணங்களும் கருத்துக்களும், அவர் புத்தியும், ஞானமும் எவ்வளவு மேலானவையென உணரவேண்டுமானால், நான் அதிகம் சொல்லவேண்டுவதில்லை. பாவசங்கீர்த்தன விளக்கப் பிரசங்கமென்னும் அவர் இயற்றிய புஸ்தகம் ஒன்றைப் படிப்பதினாலேயே நன்கு விளங்கும். அதில் நமது கத்தோலிக்கு வேதத்தின் மேன்மையான முறைகளையும் உண்மைகளையும் எடுத்துக்காட்டி அவைகளைத் தெற்றென விளக்கியிருக்கிறார்.

"ஆகையினால் அவர் நம்முடன் இந்த 25-வருடகாலம் நம் ஜீவிய ஊன்றுகோலாயிருந்து வழிநடந்ததுபோல இன்னும் வெகு நாள் நற்சுகத்துடன் நம்முடனிருந்து அவரது தங்க ஜூபிலியையும் வைர ஜூபிலியையுங் கொண்டாடக் கடவுள் கிருபை செய்வாராக! அவருடைய இந்த வெள்ளி ஜூபிலி மகோற்சவத்தை நாமனைவரும் கூடி அவரோடு ஏகோபித்து சந்தோஷ அக்களிப்புடன் கொண்டாடி அவர் மனப்பூரண ஆசீரைப் பெறுவோமாக.

"இதன்றியும் இனிவரும் நம்மிந்திய சிறுவர்கள் விஷயத்தில் கூடியமட்டும் பிரயாசை எடுத்து பத்துக் குடும்பத்துக்கொரு பிள்ளையாவது சுவாமியாராகவும், அவர்கள் நமது சங். பெர்னாண்டெஸ் சுவாமியாரைப்போலக் கடவுளுக்காக வுழைத்து நமக்கு நன்மை பயக்கவும் கடவுள் அநுக்கிரகிப்பாராக!

"சங். தகப்பனவர்களே! தாங்கள் இந்திய குருவானவராயிருப்பதினாலும், நமது தேச வழக்கங்கள் யாவும் தங்களுக்கு தெரிந்திருப்பதினாலும், நமது இந்திய மாதர்கள், மனத்திடனும், கல்வியும், தைரியமும் இல்லாமைக்கும் இந்திய குருமார் குறைவாயிருப்பதற்கும் அந்த தாய்மாரே காரணம் என்று தேவரீர் நன்கு அறிவீர்கள். ஆகையால், அவர்களைக் கல்வியிலும் ஒற்றுமையிலும், தைரியத்திலும் பொதுநல ஊக்

கத்திலும் உற்சாகப்படுத்தி பெண் கல்வியை விருத்திசெய்யப் பிரயாசையெடுத்து பேதைப் பெண்களாகிய எங்களை முன்னுக்குக் கொண்டு வர மிகவும் தாழ்மையுடன் இந்திய ஸ்திரீகளாகிய நாங்களனைவரும் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்."

சென்னை,
23—2—20. எம். பி. குழந்தைசாமி.

---

## புத்தந்துறை அர்ச். ஜெபமாலை மாதா திருவிழா.

### என்னைப் பிரஸ்தாபிப்போர் நித்திய ஜீவியம் பெறுவர்.

ஐயா! சங்கைக்குரிய பத்திராதிபரே!

வழமைபோல் இவ்வருடம் பெப்பிரவரி மாதம் 6-ம் வ காலை 7 மணிக்கு பெரிய பாடற் பூசையும், மாலை 6 மணிக்கு கீதவாத்தியங்கள் முழங்க, பாலியரும், பருவ முதிர்ந்தவர்களும் லத்தீன் பாடல்களினால் ஸ்துத்தியம் செய்ய, அதிர்வேட்டுக் கிளம்ப, இன்னும் சொல்லொண்ணா ஆரவாரச் சிறப்போடும், தீபதூபங்களோடும் கொடியேற்றப்பட்டு தேவ அன்னையின் சுரூப ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டது. அன்றுதொட்டு மற்ற ஒன்பது நாட்களிலும் காலையில் திவ்யபூசையும், மாலையில் திவ்ய அன்னையின் திருச் சுரூப ஆசீர்வாதமும், ஒன்பதாம் நாளாகிய 14-ம் தேதி சனிக்கிழமை இரவு வேஸ்பர்ஸ் என்னும் மாலை ஆராதனையின் போது பாண்டுவாத்தியத் தொனியோடு பாடகர் அரும் கீதங்கள் பாட, அலங்கிர்தமான எண்ணிறந்த தீபதூபங்களோடு அதிர்வேட்டுகள் முழங்கின. மணக்குடி கனம் அம்புரோஸ் பெர்ணண்டெஸ் சுவாமியவர்கள் இரும்பைப்போல் கடினப்பட்ட பாவிகளின் மனது மெழுகைப்போல் உருகுமாறு இனிது பிரசங்கித்தார்கள். அதின்பின் சப்பரச் சுற்றுப்பிரகாரம் மிக்க விமரிசையாய் நடைபெற மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு எங்கள் ஞான விசாரணைக் குரு சுவாமியவர்களால் திவ்யபூசையும், பூசையின்போது 65 பிள்ளைகளுக்கு புதுநன்மையும் கொடுக்கப்பட்டது. அதன்பின் 8 மணிக்குப் பெரிய பாடற்பூசை பாண்டுவாத்தியத்தோடும் அதிர்வேட்டுகளோடும் முடியவே, சுமார் 11½ மணிக்கு எங்கள் ஞான விசாரணைக் குரு சுவாமியவர்களால் திருச்சுரூபம் தேரில் பெலப்பித்ததும், கார்மேல்மாதா சபை, இருதயச் சபை, அர்ச். பிரான்விஸ்க் சவேரியார் பரத பாலிய சங்கத்து அங்கத்தவர், பால சேசு பள்ளிக்கூடச் சிறுவர், பெண் பாடசாலைச் சிறுமிகள், மற்றும் கிறீஸ்துவர்களும், திவ்ய அன்னைக்குத் தோத்திரமாக நூற்று ஐம்பத்திமூன்று மணிச் செபமும், தேவ அன்னையின் வரலைக் கெஞ்சி இனிய பாக்களும்பாடி பின்செல்ல, சப்பரங்களும், திவ்ய அன்னையின் தேரும் ஊர்த் தெருக்கள் சுற்றி கோவிலுக்கு வர, வழியில் பல இடங்களில் இடப்பட்டிருந்த தண்ணீர்ப் பந்தலிலும், தயிர்ப் பந்தலிலும் மகா பரிசுத்த இராக்கினியின் தேருடன் வந்தவர்களுக்குச் சம்பிரமமாய் வழங்கப்பட்டது. தேரும், சப்பிரங்களும் கோவிலுக்கு வந்துசேர்ந்தன. மாலை தேவநற்கருணை ஆசீர்வாதத்தின்பின் தேரில் நின்று திருச் சுரூபம் இறக்கியும், கொடியிறக்கியும், திரு உற்சவம் இனிது சமாப்தியாயிற்று.

இவ்வருடம் தேவ அன்னையின் திரு உற்சவம் எம் அதி நேச சங். சைமன் கொன்சாகோ சுவாமியவர்களின் முயற்சியால் ஒற்றுமையாய் கொண்டாடப்பட்டதுபோல் வருங் காலங்களிலும் கொண்டாடப்பட மேற்படி சுவாமிகளுக்கு தீர்க்காயுளையும் நற்சுகத்தையும் சர்வேசுரன் கட்டளையிடுவாராக.

இங்ஙனம்,
பரததல நேசன்.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாசாரம்.

இராஜப் பிரதிநிதி.—லார்டு செம்ஸ்போர்டுக்குப்பிறகு லார்டு செல்பர்ன் பிரபு இந்தியாவுக்கு இராஜப் பிரதிநிதியாய் வருவார்போல் தோன்றுகிறதென்று சமீபத்தில்வந்த தந்தி சமாசாரத்தால் தெரியவருகிறது.

மாஜி கெய்சர்.—ஐரோப்பாவின் சமாதானத்துக்கே ஆபத்து வருவதாகக் கருதும்பட்சத்தில், கெய்சரை ஹாலண்டிலிருந்து வெளியேற்ற, டச்சுக்காரர்கள் சம்மதித்திருக்கின்றனராம்.

போல்ஸ்விக்கர்கள்.—பிரிட்டனுக்கும் போல்ஸ்விக்கர்களுக்கும் சமாதான ஊடாட்டம் நடைபெற்றுவருகிறதென்ற வதந்தி வெறுங் கட்டுக்கதையென்பது

தெளிவாய்த் தெரியவருகிறதென லண்டன் தந்தியொன்று கூறுகிறது.

**பண்ணூரில் பெண் கல்வி.**—பண்ணூர் பங்கு சுவாமியாராகிய சங். தோமாஸ் சுவாமியார் அவர்களின் நன்முயற்சியால் அவ்வூரில் ஒரு பெண் பாடசாலை புதிதாய்க் கட்டப்பட்டு, சென்றமீ 16-ம் உயன்று, இராயபுரம் அர்ச். அன்னம்மாள் மடத்துக் கன்னியர்களால் அது ஆரம்பிக்கப்பட்டது. 50 சிறுமிகள் படிக்கிறார்கள். இது தாலுக்கா போர்டு அதிகாரத்தில் நடைபெறுமென்று சொல்லப்படுகிறது.

**12 வயதுள்ள பண்டிதை.**—இங்கிலாந்தில் லார்டு பிராட்போர்டு என்ற பிரபுவின் குமாரத்தியான 12 வயதுள்ள பெண் இங்கிலீஷில் மெத்த அருமையான கவிபாடுந் திறமையுள்ளவளா யிருக்கின்றனளென்றும், அவள் இதுவரையில் பாடிய பாடல்கள் அடங்கிய புத்தகமொன்று அச்சிடப்பட்டு சமீபத்தில் வெளியாக்கப்படுமென்றும் சொல்லப்படுகிறது. இது பெரியதோர் ஆச்சரியமே!

**பிரிட்டனில் நிக்கல் நாணயம்.**—வெள்ளியின் விலையேற்றத்தைப்பற்றி, இங்கிலாந்து, ஸ்காட்லாண்டு, ஐயர்லாந்து ஆக இம்மூன்று தேசங்களிலும் நிக்கல் நாணயங்கள் வழங்கப்படவேணுமென்று தீர்மானித்ததால், அமெரிக்காவின் தலைநகரமாகிய வாஷிங்டன்னிலுள்ள மாண்டு நிக்கல் கம்பனியார் பிரிட்டனுக்கு வேண்டிய நிக்கல் நாணயங்களை அச்சிட்டுக்கொடுக்க ஒப்பந்தம்பண்ணிக்கொண்டனரென்று தெரிகிறது.

**வெள்ளி ரூபாய்.**—வெள்ளியின் விலையேற்றக் காரணமாய் நம் நாட்டில் சில்லறை நாணயங்கள் வெள்ளைச்செம்பு என்று சொல்லப்படும் நிக்கலில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகிறதல்லவா? இதைக் கண்ட சிலர் முழு ரூபாய்களும் நிக்கலில்தான் அச்சடித்துக் கொடுக்கப்படுமென்று கலவரப்பட்டார்கள். அப்படியல்ல. ரூபாய்கள் வெள்ளியிலேயே அடிக்கப்படுமென்றும், வேறு லோகத்தில் அடிக்கப்படாதென்றும் கவர்ண்மென்டார் சமீபத்தில் உறுதிமொழி கூறியிருக்கிறார்கள்.

**துருக்கி சமாதானம்.**—நேசகட்சியார் துருக்கியோடு சமாதானம் செய்வதின் நிபந்தனைகளை சுப்ரீம் கவுன்சில் பின்வருமாறு தீர்மானித்திருக்கிறது: சுல்தான் கான்ஸ்டாண்டிநோபிலில் இருக்கலாம். டார்டனல்ஸ், பாஸ்பரஸ் ஆகிய இவைகள் இராணுவக் கடற்படை வைத்துக் காக்கப்படும். ஆசியாவிலுள்ள நாடுகளில், சீரியா, மெசபொடேமியா, அரேபியா ஆகிய இந்நாடுகள் நீங்கலாக மற்றெல்லா நாடுகளும் துருக்கிக்குக் கொடுக்கப்படும்.

**ஜப்பானில் இன்புளுவென்சா.**—ஜப்பான் தேசத்தில் இன்புளுவென்சாவென்னும் விஷஜுரம் வெகு மும்முரமாய்ப் பரவிவருகிறதாம். சென்ற ஒரு மாதத்திற்குள்ளாக டோக்கியோ நகரில்மாத்திரம் இருபதினாயிரம் ஜனங்கள் இறந்துவிட்டனர். ஒரே நாளில் 1,700 பேர் இறந்ததாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. என்ன பரிதாபம்!

**ஒரு ஞாபக ஸ்தம்பம்.**—கடந்த ஐரோப்பிய யுத்த சம்பந்தமாய், நமது பரிசுத்த பாப்பானவராகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் செய்த பரோபகார ஊழியத்தை இனி வருஞ் சந்ததிகளுக்கு நினைப்பூட்டும்படி, தக்கதோர் ஞாபக ஸ்தம்பத்தை, ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் மத்திய ஸ்தானமாகிய துருக்கியிலுள்ள கான்ஸ்தாந்திநோபிள் நகரத்தில் ஸ்தாபிக்கத் தீர்மானித்து அதற்கு வேண்டிய பெருந் திரவியசேகரஞ் செய்துவருகிறார்கள்.

**ஆர்மீனியரின் படுகொலை.**—லண்டனிலிருந்து சென்றமீ 17உ அனுப்பப்பட்ட தந்தியின்பிரகாரம், துருக்கித் துருப்புகளும், கர்டு ஜாதியாரும் சேர்ந்து, சலீஷியாவிலுள்ள ஆர்மினியர்களில் 70 ஆயிரம் பேர்களைப் படுகொலை செய்தனரென்றும், மாராஷைச்சுற்றிலும் சண்டைசச்சரவுகள் நடந்துவருகின்றனவென்றும் தெரிகிறது. ஆர்மீனியர்களைப் படுகொலைசெய்வது நடந்துவந்தால், துருக்கி சமாதான உடன்படிக்கை திருத்தப்படுமென்று நேசகட்சியார் துருக்கி அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

**வட துருவ யாத்திரை** என்னும் விஷயத்தைப்பற்றி அவ்வியாத்திரை செய்த கமான்டர் ஆர்மிட்டேஜ் என்பவர் கல்கத்

தாவில் செய்த உபந்நியாசத்தின் சாராம் சமாவது :—தென் துருவத்தைவிட வட துருவத்தைப்பற்றியே ஜனங்கள் அதிகமாய் அறிந்திருக்கிறார்கள். இரண்டு துருவங்களுக்கும் அதிக வேற்றுமைகள் இருக்கின்றன. வட துருவத்தில் மிருகங்களும் பட்சிகளும் வசிக்கின்றன. தென் துருவத்தில் ஒன்றுமே கிடையாது. தென் துருவத்தில் பொன் கிடைக்குமென்று நம்பப்படுகிறது. இஃதுண்மையானால் பலர் அங்குச் செல்வர்.

**திருச்சியில் டேலபோனும், மின்சார விளக்கும்.**—தென்னிந்தியாவில் ஜனத்தொகை, விஸ்தீரணம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளில் சென்னப்பட்டணத்துக்கு இரண்டாவதாக மதிக்கப்படும் திருச்சினாப்பள்ளி நகரத்தில், டெலபோன் வசதியும், மின்சார விளக்கு வசதியும், டிராம் வசதியும் இல்லாதிருப்பது பெரிய குறையாகும். இக்குறை சீக்கிரத்தில் நிவர்த்திக்கப்படப்போவதாய்க் கேள்விப்பட்டு சந்தோஷிக்கிறோம். இவ்வித சௌகரியங்கள் ஏற்பட்டுவிட்டால் விசேஷமாய் வியாபாரமும், கைத்தொழிலும் விருத்தியடையுமென்பதில் சந்தேகமில்லை.

**சங். L. X. பேர்நாந்தீஸ் சுவாமிகள்.**—வெள்ளி ஜூபிலி மகோற்சவம் சென்றமீ 15-ம் தேதி சென்னையில் வெகு ஆடம்பரமாய்க் கொண்டாடப்பட்டது. பல ஊர்களினின்றும் அச்சுவாமிகளுக்கு சுபசோபன வாழ்த்துத் தந்திகளும், கடிதங்களும் ஏராளமாய் வந்தனவல்லாமல், பிரதிநிதிகளும் வந்து அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்ததுடன் பல வெகுமதிகளும் பணப்பைகளும் அளித்தார்கள். நாம், நமது "நல்லாயன்" பேரால் அவருக்குப் பல்லாண்டு கோரி, சுபசோபன மங்கள வாழ்த்துதல் கூறுகிறோம். இந்த ஜூபிலி மகோற்சவத்தைப்பற்றிய முழு விவரங்கள் அறிய விரும்புவோர், இச்சஞ்சிகையின் வேறோரிடத்தில் அவற்றைப் பார்க்க.

**பாப்பு ஸ்தானாதிபதிகள்**—புது ஸ்தானாதிபதியாகிய மிக. வந். பீற்றோ பைசானி ஆண்டவரவர்கள், தமது உறைவிடமாகிய பெங்களூரில் சென்றமீ 6-ம் தேதி வந்து சேர்ந்தார்கள். சென்றமீ 15-ம் தேதி அவ்விடத்திய மேற்றிராசனக்கோவிலான அர்ச். பத்திரிசியார் ஆலயத்தில் அவருக்கு ஸ்தானாதிபத்தியங் கொடுத்து, அர்ச். பாப்பானவர் எழுதித் தந்த அதிகாரப் பத்திரம் வாசிக்கப்பட்டு அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. இந்தப் புது ஸ்தானாதிபதியவர்களுக்கு நமது உள்ளப்பூர்வமாய் நல்வரவு கூறுகிறோம். பழய ஸ்தானாதிபதியாகிய மொன்சிஞ்ஞோர் புமசோனி யாண்டவரவர்கள் கொழும்புக்குப் போய், அங்கிருந்து சென்றமீ 12-ம் தேதி மாலையில் கப்பலேறி தமது புது நியமன பூமியாகிய ஜப்பான் தேசத்துக்குப் பிரயாணமாயினார்கள். அவர்கள் சிந்தாத்திரையாய்ப் போய்ச்சேர கோருகிறோம்.

**சென்னையில் புதுச்சேரி கவர்னர்.**—சென்றமீ 16உ சென்னைக் கவர்னரவர்களின் அதிதியாய் வந்திருந்த புதுவை கவர்னரவர்களை, சென்னை அதிமேற்றிராணியாராகிய மிக வந். ஆலன் ஆண்டவரவர்கள் அழைத்துக்கொண்டுபோய் மயிலை அர்ச். தோமையார் திருக் கல்லறைக் கோவிலை காண்பித்தார். பிறகு கவர்னர் அவர்கள் மயிலை மிக்வும் சங். விக்கர் ஜெனரலோடு சின்னமலையிலுள்ள அர்ச். தோமையார் குகை, அவர் சறுக்கி விழுந்தவிடம் முதலிவைகளைச் சந்தித்தார்கள். அவைகளைப் பயபக்தியுடனும் ஆவலுடனுங்கண்ட கவர்னர் மெத்தவும் சந்தோஷப்பட்டார். இவர் பக்தியுள்ள நல்ல கத்தோலிக்கரென்று தெரியவருகிறது.

**கொச்சிக் கிறீஸ்துவர்களின் கலியாணச் சட்டம்.**—கொச்சியிலுள்ள பெரும்பான்மைக் கத்தோலிக்கர்களும், தென்னிந்தியாவிலுள்ள எல்லாக் கத்தோலிக்கு மேற்றிராணிமார்களும், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்போன்ற பல கத்தோலிக்குச் சங்கங்களும் ஒரே வாக்காய், அச்சட்டம் நிறைவேற்றப்படாதென்று செய்த ஆட்சேபனைகளையும், கூக்குரல்களையும், சற்றும் பொருட்செய்யாது, கொச்சி அரசாங்கத்தார், தாம் கொண்ட கருத்தில் பிடிவாதஞ்செய்து, ஷை சட்டத்தை அரங்கேற்றிவிட்டார்களென்று கேட்டுப் பெரிதும் விசனிக்கி

றோம். கொடிய விஷப்பாம்புக்கு ஒப்பான இந்த அநியாயமும், அனாவசியமுமான சட்டத்தைக் கத்தோலிக்கர்கள் கனவிலும் நினையாமல், சத்திய திருச்சபையொழுங்கை நுணுநுணுக்கமாய் அநுசரிப்பார்களாக!

ஆனரபில் த. அருமைநாத பிள்ளை.—சென்னை அரசாங்கச் சட்ட நிரூபண சபையில், கத்தோலிக்கு இந்தியர்களின் உரிமைகளைக் காப்பாற்ற, கவர்னரவர்களால் நியமிக்கப்பட்ட கனந்தங்கிய ஸ்ரீமான் த. அருமைநாத பிள்ளையவர்கள் சென்னை கார்ப்பொரேஷன் என்னும் மியூனிசிபல் சபையிலும் ஒரு கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் சந்தோஷத்துடன் பிரசுரிக்கிறோம். இந்தக் கனவான் கத்தோலிக்கர்கள் பொது நன்மைக்காக உண்மையாகவே உழைக்குங் குணமுடையவர். சென்னையில் இப்போது அபாரமாய் உயர்த்தப்பட்டுப்போன வீட்டுக் குடிக்கூலி விகிதத்தைக் குறைத்துத் திட்டப்படுத்துவதற்கான ஒரு மசோதா சட்டத்தை அடுத்த சட்ட சபையில் கொண்டுவரப்போகிறாரெனத் தெரியவருகிறது.

உயிர் கோல்லும் கோப்பை.—காப்பியென்னும் காப்பிக்கொட்டை கஷாயமும், தேத்தண்ணீர் என்னும் தேயிலைக் கஷாயமும் தேகத்துக்குக் கேடு விளைவிக்கிறதென்பதைப்பற்றிக் கீர்த்திபெற்ற டாக்டர் ஒருவர் அதை "உயிரைக் கொல்லும் கோப்பை" என்கிறார். அவர் போதனை பின்வருமாறு:—தேபானத்தில் விஷமிருக்கிறது. இருந்து இருந்து இப்பானத்தால் நேரிடும் ஆபத்துகள் பிரத்தியட்சமானபோதிலும், அதைப் பற்றிக் கவனிப்பார் எவருமிலர். பலஹீனமான அல்லது கொழுத்த இரத்தாசயமாகிய இருதயங்கள் திடீரென்று நின்று மரணங்கள் நிகழ்கிறதற்கு இது காரணமாகும். தேபானம் அடிக்கடி அருந்துகிறவர்கள் வழக்கத்தினாலேயே ஓயாமல் மதுவருந்தும் குடிகாரர்களைப்போல அடிக்கடி தேபான மருந்தி, அநேக வியாதிகளுக்குள்ளாகி, நீரிழிவு, முதலிய கொடிய வியாதிகளுக்கு ஆளாகி, அகாலமரணத்துக்குள்ளாகிறார்கள். அதிக இளக்கத்தரமான தேயிலைகளின் கஷாயத்தினால் தயார்பண்ணப்படுகிற தேபானத்திலோ பிரஸ்தாப நஞ்சு இருந்தபோதிலும், அருந்துகிறவனைத் திடீரென்று கொல்லாமல், நாளாவட்டத்தில் அவனுடைய திடகாத்திரத்தைக் குறைத்துவருகிறதாம். ஆதலின் அதிகமாய் அடிக்கடி சுடச்சுட மிக்க கேவலமான தரத்தைச்சேர்ந்த தேயிலையின் பானத்தைப் பருகுகிறதைவிட நல்ல தேயிலை பானத்தை ஒரு நாளைக்கு ஒரு முறைமாத்திர மருந்திவந்தால் விக்கினமிராதென்பது சில வைத்தியர்களின் சித்தாந்தம். ஆயினும் தேயிலை பானத்தையும், காப்பித்தண்ணீர் குடித்தலையும் முற்றுமே நீக்கிவிடுவது உத்தமம்.

ஜேர்மனியின் எதிர்கால நிலைமை.—ஜெர்மன் ஜெனரலான, வான் பெர்ன்ஹார்டியென்பவர், "நியூயார்க்வொர்ல்ட்" என்னும் பத்திரிகை நிருபரைக் கண்டு பேசியபோது, ஜெர்மனியின் எதிர்கால நிலைமையைப்பற்றி அந்த ஜெனரல் கூறியது:—மறுபடியும் கெய்ஸரின் ஆதிக்கம் வந்துவிடும். மாஜி கிரவுன் பிரின்ஸ் சக்ரவர்த்தியாகக்கூடும். ஜெர்மானியர்களின் எண்ணங்கள் பழய கொள்கையைத் தழுவியிருக்கின்றன. ஜெர்மனியின் எதிர்கால நிலைமையில் படை தன் அதிகாரத்தைச் செலுத்தும். முக்கியமான மாறுதல்கள் ஏற்படுகிற நிலைமையிலிருக்கிறோம். ரோமன் காத்லிக் அரசாட்சியை நிலைநிறுத்த அநேக கட்சிகள் முயற்சி செய்துவருகின்றன. இதனால் இங்கிலாந்திலுள்ளதைப்போல பார்லிமெண்டரி அரசாட்சி ஏற்படும். பார்லிமெண்டரி அரசாட்சி தேசத்துக்கு நன்மையை விளைவிக்காதென்று எண்ணுகிறேன்.

சம்பள உயர்வு.—கவர்ண்மெண்டு உத்தியோகத்திலுள்ள சிப்பந்திகளுக்கு மாதாந்தர யுத்தப்படியுடன் கூடிய குறைந்த சம்பள விகிதம் உயர்த்தப்படவேண்டுமென்று கவர்ண்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த உயர்ந்த சம்பளம் கடந்த பிப்ரவரி மீ முதல் தேதி தொடங்கி வழங்கப்படும். ஆகவே, இந்த மார்ச்சு மீ முதல் தேதியிலும் அதை யடுத்த தினங்களிலும் சம்பளம் வாங்குவோர் உயர்ந்த சம்பளத்தை

எதிர்பார்க்கலாம்: அதாவது பின் குறிக்கப்பட்டிருக்கிற விகிதத்துக்குக் குறைந்த சம்பளம் வாங்குவோருக்கெல்லாம், அந்த விகிதப்படி சம்பளம் உயர்த்தப்படும். இராஜதானிப்பட்டணத்திலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு, வெளியூர்களிலிருக்கிற உத்தியோகஸ்தர்களைவிட சற்று அதிகவிகிதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்விகிதம் பின்வருமாறு :—

| உத்தியோகஸ்தர் விவரம். | இராஜதானி. சம்பள விகிதம். | வெளியூர். சம்பள விகிதம். |
|---|---|---|
| எல்லா குமஸ்தாக்களுக்கும் டைபிஸ்டுகள், ஸ்டோர் கீப்பர்கள், முதலியவர்களுக்கு | ரூபா. 35. | ரூபா. 30. |
| ஷிராப்புகள், டிராப்ட்ஸ்மென்கள், கம்பூட்டர்கள் முதலியவர்களுக்கு | 25. | 22. |
| அட்டெண்டர்கள், கான்ஸ்டேபில்கள் ஜமேதார்கள், டபேதார்கள் முதலியவர்களுக்கு | 15. | 12. |

ஷை விகிதத்துக்கு மேற்பட்ட சம்பளம் இப்போது வாங்குகிறவர்களுக்குச் சம்பளம் குறைக்கப்படமாட்டாது. இதற்குக் குறைந்து வாங்குவோருக்கு இதற்குச் சமமாய் உயர்த்தப்படும்.

**என்னென்று சொல்லுவது?**—“தாழ்த்தப்பட்ட வகுப்பினரை உயர்த்துகிறோம், தேசீய ஊக்கம் எங்கும் பெருக்கமடைந்து வருகிறது, இந்தியர்களெல்லோரும் ஒரு தாய் மக்கள்தான், சகோதரர்கள்தான், உயர்வு தாழ்வில்லை, எங்களுக்குச் சுய இராஜ்ஜியம் கொடுத்துவிடத்தான்வேண்டும், கொடுத்துத்தான் பாருங்கள்” எனப் பலவாறு பேசுகிறார்கள் பேச்சுக் கற்றோர்கள். ஆயினும் பேசுவதொன்று, செய்வதொன்று. பேசினபிரகாரம் நடக்கிறவர்கள் வெகு சொற்பம். மனிதரிடத்து வாக்கும் மனமும் செய்கையும் ஒன்றுக்கொன்று பேதப்படாமலிருக்குமானால், அன்றே சுய இராஜ்ஜியம் கிடைத்துவிடும். கோர்ட்டுகள் வேண்டாம், கொத்தளங்கள் வேண்டாம், போலீசுவேண்டாம், வேறெதுவும் வேண்டாம். இப்படியிருக்க, சமீபத்தில் திருவண்ணாமலையில் காருண்ய பிரிட்டிஷ் இராஜாங்க அதிகாரிகளின் பெருமிதமான முயற்சியால் சக்கிலி வகுப்பைச் சேர்ந்த புத்திமான் ஒருவர், மிஸ்டர் ஆதிமூலமென்பார் முனிசிபாலிட்டி கவுன்சில் மெம்பராக நியமிக்கப்பெற்றார். முனிசிபல் மீட்டிங்குக்கு அவர் முதல் முறை வந்தபோது, தாம் அடைந்த வெற்றியைக் கொண்டாடி, பூமாலை யணிந்து, மேளதாளத்துடன், சற்று ஆரவாரமாய், மீட்டிங்குக்கு வந்தார். இந்தப் புது மெம்பரை வரவேற்க, சேர்மென் மிஸ்டர் இராதாகிருஷ்ண செட்டியார்மாத்திரம் அங்கு காணப்பட்டாரேயன்றி, மற்ற மெம்பர்களில் ஒருவராவது வந்தாரில்லை. நாற்காலிகளெல்லாம் வெறுங் காலியாகவே கிடந்தனவாம். இதை யென்னென்று சொல்வது? சகோதரத்துவ சாரமென்போமா? சுய இராஜ்ஜிய சத்து என்போமா? தேசீய ஊக்கத்தின் கொழுந்து என்போமா? என்னென்போம்?

**யுத்தக் குற்றவாளிகள்.**—நேச தேசத்தினர் ஜெர்மனிக்கு உத்தியோக முறையில் அனுப்பிய குற்றவாளிகளின் ஜாபிதா 194 பக்கங்களைக்கொண்டதாயிருக்கிறது. பிரிட்டன் தேசம் ஜெர்மனியிடமிருந்து 100 குற்றவாளிகளை, அதாவது பிரிட்டனுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த ஜெர்மன் குற்றவாளிகளைக் கேட்கிறது. இவ்வாறே பிரான்சு 234, பெல்ஜியம் 334, இற்றலி 29 குற்றவாளிகளைத் தத்தமக்கு ஒப்புவிக்கும்படி கேட்கின்றன. ஜெர்மனியரோ, எங்கள் ஜனங்கள் அந்நிய தேசத்தாரால் விசாரணை செய்யப்பட நாங்கள் சம்மதியோம் எனச் சொல்லுகிறார்கள். ஆகையினால், இப்போது அக்குற்றவாளிகளை, ஜெர்மனியிலேயே விசாரிக்கிறதற்காக நேச தேசத்தார் ஏற்பாடு செய்கிறார்கள். ஷை பிரிட்டிஷ் ஜாபிதா பின்வரும் 8 வகுப்புக்குற்றங்களாய்ப்பிரிக்கப்பட்டிருக்கிறது:—1-ல் குற்றம் :—ஜலமுழுகிக் கப்பல்களைக்கொண்டு கப்பல்களை திடீரென்று நாசமாக்கியது; எச்சரிக்கையில்லாமல் வர்த்தகக் கப்பல்களை நாசப்படுத்தியது. மேற்கூறிய குற்றத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் குற்ற ஜாபிதாவில் குறிக்கப்பட்டிருக்கின்றனர். இன்னுமிவர்கள் ஆஸ்பத்திரிக் கப்பல்களையும் முழுகடித்துவிட்டனர். பத்தரை மாதத்திற்குள் ஜலமுழுகிக் கப்

பல் கமாண்டர் ஒன்பது கப்பல்களை முழுகடித்துவிட்டார். 2-வது குற்றம்:— பாதுகாக்கப்படாத பட்டணங்களைத் தகர்த்தது. 3-வது குற்றம்:—ஜலமுழுகிக் கப்பல்களிலிருந்து சுரங்கங்களைப்போட்டது. 4-வது குற்றம்:—ஸ்காண்டிநேவியாவுக்குப் போய்க்கொண்டிருந்த கப்பலைத் தாக்கியது. 5-ம் குற்றம்:—ஆகாய விமானங்களால் தாக்கியது. லண்டன், ஹல், எடின்பரோ இவ்விடங்களைத் தாக்கியவர்கள் யாவரும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றனர். 6-வது குற்றம்:—காப்டன் பிரையட்டைச் சுட்டது. 7-வது குற்றம்:— யுத்தக் கைதிகளைச் செவ்வையாய் நடத்தாதது. யுத்தக் கைதிகளைக் கேவலமாய் நடத்தியவர்களின் பெயர் சேர்க்கப்பட்டிருக்கின்றன. என்வர் பாட்சாவும் இன்னுஞ் சிலரும் கைதிகளைச் சுடுகிற இடத்திற்கு அருகாமையில் வைத்திருந்தனர். ஜர்மன் மேற்காப்பிரிக்காவில் பிரிட்டிஷ்காரர்களுக்கும், இந்தியர்களுக்கும் செய்த கெடுதிக்கர்கக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. 8-வது குற்றம்:—ஆர்மீனியர்களைப் படுகொலை செய்தது. இக்குற்றத்தில் என்வர் பாட்சா, டாலாட் பாட்சா, டிஜாசல் பாட்சா சேர்ந்திருக்கின்றனர்.

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைப் பத்திக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுப் பத்திக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

### நன்மரண அறிக்கை.

**மேமியா.**

“ தயையாயிருங்கள், என் நேசர்களே,
நீங்களாவது என்பேரில் தயையாயிருங்கள் ”
(யோபு 19-ம் அதி. 21-ம் வசனம்).

திருநெல்வேலி ஜில்லாவைச்சார்ந்த வடக்கன்குளத்தில் ஜனித்து, உத்தியோகத்தினிமித்தம் பர்மாவைச்சார்ந்த மேமியாவில் சென்ற சுமார் 30-வருஷகாலமாய் வாசஞ்செய்து, டேவிட் என்று பெயர் வழங்கிய ஊ. செ. திவ்வியானந்தம் பிள்ளை அவர்கள், சென்ற 3-வருஷ காலமாய் வாதரோகத்தால் பீடிக்கப்பட்டு வேண்டும் சிகிச்சை செய்தும் குணப்படாது, கடைசி தேவத்திரவிய அநுமானங்களைப்பெற்று, 1920 ஞு ஜனவரிமீ 13உ செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு தமது மனைவி, மக்கள், பந்துக்கள் யாவரையும் இவ்வுலகில் பரதவிக்கவிட்டு, பரலோகப்பிராப்தியடைந்தனர். இதை வாசிக்கும் நண்பர்களே இவ்வாற்றும நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Rangoon,
4—2—1920.

V. S. M.

**சாரங்கர்.**

27-வது காலாட்படையில் Drill Naick ஆய் இருந்து பென்ஷன் என்னும் உபகார சம்பளம் பெற்றுவரும் S. Santiago தெரிவிப்பதாவது: எனது தாயார் ஸ்ரீமதி மரியம்மாள் 1919ஞு டிசம்பர்மீ 21உ ஞாயிற்றுக்கிழமை மாலை 2½ மணிக்கு தமது 85-ம் பிராயத்தில் தன் ஆத்துமாவை வெகு அமரிக்கையுடன் பிதாவின் கையில் ஒப்புவித்தனள். இவளது ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. மந்திரங்களை வேண்டிக்கொள்ள சகலரையுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

பெற்ற தாயை யிழந்து பரிதவிக்கும் குமாரர்

S. SANTIAGO,
Games Superintendent,
*Sarungarh State, C. P.*